# நம் வழி வேளாண்மை

பருவம் 33 | அக்டோபர் – டிசம்பர் 2025 | இதழ் 3



**சென்னையில் 5.12.2025 ல் நடைபெற்ற மேய்ச்சலிய உயிர்மப் பொருளாதாரமும் கரிமக் குறைப்பும் கருத்தரங்கில் கிடைக்காரர்களுக்கான செயலி வெளியிடப்பட்டது**

*இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்*
*மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 33 அக்டோபர் – டிசம்பர் 2025 இதழ் 3

ஆசிரியர்

**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.


### நம்வழி வேளாண்மை குழுமம்
### பிற மொழி இதழ்கள்

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பல்லி ஸ்ருஜானா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே |



**நம் வழி வேளாண்மை**

45, டி.பி.எம். நகர், –3 வது தெரு

விராட்டிபத்து, மதுரை – 625 016.

தொலைபேசி : 0452– 2380082, 9344523892.

இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,

**Honey Bee,**

SRISTI, AES Boys Hostel Campus,

Near Gujarat University Library & SBI Bank,

Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,

email: honeybee@sristi.org


## நெல்மணி பூமிக்கு வந்த கதை

(புறச்சுத்தம் அகச்சுத்தம் வித்திற்கும் பொருந்தும்)

சிவபெருமான் ஒரு முறை, அன்னபூர்ணாவை அழைத்து, இவ்வுலகின்கண் முதற் தாவரமாகிய அருகம்புல்லை படைத்தோம். இதோ இதைப் பிடி என்று ஒரு தானியம் போன்ற ஒன்றைத் தருகிறார்.

“இது என்ன சிவனாரே?”– என்று அன்னபூரணா கேட்க சிவனார் சொல்வார் “ இதுதான் நெல், இதை பூமிக்கு அனுப்ப வேண்டும். அதற்கு முன் இதை பெருக்கிட வேண்டும் என்கிறார்.

“அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்” – என அன்னபூர்ணா கேட்டிட சிவனார் சொல்வார் “உள்ளும், புறமும் ஒன்றாகத் திகழும் ஒருவர் கைகளில் கொடுத்திட இது பெருகிடும்” என ஈசன் உரைக்கிறார்.

அன்னபூர்ணாவும் அப்படி ஒருவரை தேடிட.... யாருமே அகப்படவில்லை. இது போல் இங்கு இல்லை என தேவர்கள் உட்பட எல்லோரும் உரைத்து விடுகிறார்கள். ஒரு நொடி கூட ஒருங்கிணைந்த மனதுடையவர் யாருமில்லை என்கிறார்கள்.

இது ஈசனின் திருவிளையாடல் என எண்ணி அன்னபூர்ணாதேவி, ஈசனிடம் வந்து உரைத்து, “ஐயனே இந்த நெல்மணிகளை நீங்களே பெற்றுக் கொள்ளுங்கள்” என்றிட ஈசனார் “ சற்று பொறு அன்னபூரணா.... பொறு.. “ – என்று கூறிய பின். “அகத்தியா”...என்று அழைக்கிறார். ஈசனாரின் நெஞ்சிலிருந்து அகத்தியர் பெருமான் உருவாகி நின்றிட... அன்னபூர்ணா..... அந்த நெல்மணியை என் மைந்தனிடம் கொடு என்கிறார்.


அன்னபூர்ணாவும் அந்த நெல் மணியை அகத்தியர் பெருமான் கரத்தில் கொடுக்க.... அடுத்த கணம்... நெல் கோடிக்கணக்கான மணிகளாகி பூமியில் விழுந்து முளைத்தது. எல்லோரும் பெருமானை வணங்கி நிற்கிறார்கள்.

முதலில் நெல் தாவரம் ஆசியக்காடுகளில் / ஒரிஸ்ஸாவில் காணப்பட்டதாக தாவரவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். மனிதனின் உள்ளுணர்வு, மற்றும் உணவு தேடுதல் குறித்த உணர்வால் இதைக் கண்டறிந்து உணவாக பயன் படுத்தினான்.

தகவல் : சா.அனந்தகுமார். அகத்தீஸ்வரம்.

செல்: 9626009777

## நீரோட்டத்திலிருந்து மின்சாரம் எடுத்தல்




மலைக்கிராமங்களில் இயற்கையாக வழிந்தோடும் வாய்க்கால் நீர், அருவிகள் மூலம் டைனமோ கருவியை இயங்க வைத்து (Turbine) அதிலிருந்து மின்சாரத்தை எடுக்கும் முறையை எளிமைப்படுத்தியுள்ளார். திரு. இரத்னாகர் இவர் கர்நாடகா மாநிலம் சிக்மகளூர் மாவட்டம் குட்டேதோட்ட என்ற கிராமத்தில் வசித்து வருகிறார். இவருக்கு 67 வயதாகிறது. இவர் பதினென்றாம் வகுப்பு வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். இப்பகுதியில் வருடம் முழுவதும் விவசாயத்திற்கு நீர் பாய்ச்ச பஞ்சமில்லை. உபரியான நீரிலிருந்து மின்சாரம் எடுத்து பள்ளி மாணவர்கள் வெளிச்சத்தில் படிப்பதற்கு உதவும் என்ற எண்ணத்தில் இந்த மின்சாரம் உண்டாக்கும் கருவியை (டர்பன் எனப்படும் விசைச்சுழலி) உருவாக்க முயற்சித்தார். முதலில் சைக்கிளில் உள்ள டைனமோவைப் பயன்படுத்தி அதை நீரோடையில் நீரின் வேகத்தில் சுழலச் செய்து வரும் மின்சாரத்தை பேட்டரி மூலம் வெளிச்சத்திற்கு பயன்படுத்தினார். இதனை 1996ல் முதன்முதலில் செய்து பார்த்தார். படிப்படியாக டிசி மின்சாரத்திலிருந்து ஏசி மின்சாரம், பின் ஆல்டர்னேட்டர் மூலம் தனது தொழில்நுட்பத்தை மேன்மைப்படுத்தி பல மாடல் டர்பைன்களை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் வீட்டு உபயோகத்திற்கான மிக்ஸி, கிரைண்டர், பேன், லைட், தெருவிளக்கு போன்றவற்றிற்கு மின்சாரத்தை சேமித்து கொடுக்கும் முறையை சிக்கனமான முறையில் செய்து வருகிறார். இவர் கடந்த 25 ஆண்டுகளில் 570 இடங்களில் 60 மலைக் கிராமங்கள்,வனப்பகுதியில் வசிப்போர்களுக்கு மின்சாரத்தை வழங்கி புரட்சி செய்துள்ளார்.



இவர் உருவாக்கும் மின்சார அளவு 0.5 கிலோ வாட்ஸ் லிருந்து 25 கிலோ வாட்ஸ் ஆகும். இவர் கர்நாடகா, மேகாலயா, உத்தர்காண்ட், கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களில் 570 இடங்களில் இந்த டர்பைன் என்ற நீரோட்டத்தில் இயங்கும் விசைச்சுழலியை உருவாக்கி உள்ளார். உதாரணமாகக் எடகொண்டா கிராமத்தில் 6 இடங்களில் இந்த டர்பனை வைத்து 30 கிலோ எடை கிலோவாட்ஸ் திறன் மூலம் நித்தமும் 500கிலோ வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் 30 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றனர்.

G.K. Rathnagar, Turbo Turbine Lights,
Jayapura -577123. Koppa Taluka,
Chikmagalur District. Karnataka.
Cell : 9448407703

## இயற்கை வேளாண்மையில் பல அடுக்கு சாகுபடி மூலம் வருமானம் கூட்டுதல்



ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், குப்பம், சீகலபள்ளி கிராமத்தில் திரு. கிருஷ்ணமூர்த்தி (வயது 38) 4 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறார். இவர் டிப்ளோமா இன்ஜினியரிங் முடித்துவிட்டு பெங்களூர் ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். பணியை விட்டு விட்டு 2006ல் சொந்த ஊருக்கு வந்து விவசாயம் செய்ய ஆரம்பித்தார். இவரிடம் 4 மாடுகள், நாட்டு கோழிகளும் உள்ளன. 2014 லிருந்து இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். 2017ல் சுபாஸ் பாலேக்கர் பயிற்சி கொடுத்த ஜீரோ பட்ஜெட் வேளாண்மையை ஆர்வத்துடன் பின்பற்றினார். சாதாரணமாக ஐ.டி. கம்பெனியில் வேலை பார்ப்பவர்கள் மாதம் ரூ. 25,000 லிருந்து ரூ. 1 லட்சம் வரை சம்பாதிக்கின்றனர். இதற்கு இணையாக தனது முயற்சியால் தற்போது மாதம் ரூ. 20,000க்கு

குறையாமல் நிகர வருமானம் எடுத்து வருகிறார். இதற்கு இவர் கடைபிடிக்கும் உத்திகள் பின்வருமாறு:
1. முதல் மாடல் : இதில் சுமார் 36’x36’ அடி பாத்திகளாகப் பிரித்து இதில் 6 அடி இடைவெளியில் மா, பப்பாளி, கொய்யா, எலுமிச்சை, சீத்தாப்பழம், தென்னை போன்றவற்றை பயிரிடுகிறார். இடைவெளியில் காய்கறி பயிர்களான பீட்ரூட், கேரட், முள்ளங்கி, மஞ்சள், வெண்டை போன்றன பயிரிடுகிறார். நிலத்தில் எந்த இடைவெளியிலும் இடம் விடாமல் நிலக்கடலை, பாசிப்பயறு, புதினா எனப் பல வகையான பயிர்களை சாகுபடி செய்கிறார். மரத்திலிருந்து உதிரும் இலைகளை மூடாக்காகப் பயன்படுத்துகிறார். உரமாக கனஜீவாமிருதம், தெளிக்கும் கரைசல் ஜீவாமிருதம் கொடுக்கிறார். பூச்சி, நோய்களுக்கு நீம் அஸ்த்ரம் போன்ற மூலிகை பூச்சிக் கொல்லியைத் தானே தயாரித்து பயன்படுத்தி வருகிறார்.
2. இரண்டாவது ஏ.டி.எம். மாடல்
இம்முறையில் 20 செண்ட் நிலத்தில் நிலத்தை சுற்றி நைலான் வலை போட்டுள்ளார். இதில் 4 அடி அகலமுள்ள மேட்டுப்பாத்தி அமைத்துள்ளார். இடைவெளி 1 அடி விட்டு அதில் நீர்பாசன வாய்க்கால் / சொட்டு நீர் பாசனக்குழாய் செல்லவும், நடந்து செல்லவும் முடியும். இந்த பெட்டில் 16 வகையான காய்கறிகள் முள்ளங்கி, பீட்ரூட், காரட், கீரை வகைகள், வெண்டை போன்றவற்றை பயிர் செய்கிறார். அறுவடை முடிந்தபின் இடைவெளி காலம் விடாமல் மீண்டும் வேறு காய்கறி பயிர் செய்யப்படும். இவ்வாறு இயற்கை முறையில் விளைந்த காய்கறிகளை குப்பம் நகருக்கு எடுத்துச் சென்று இயற்கை அங்காடியில் கொடுத்து விற்பனை செய்யப்படுகிறது. இவருடைய நேர்மையான இயற்கை விவசாயம் அனைவருக்கும் தெரிந்துள்ளதால் இவருடைய பொருட்களுக்கு நல்ல விலையும், கிராக்கியும் உள்ளது.
முதல் மாடலில் வருடத்திற்கு 2,99,600 ம் அதாவது மாதம் ரூ. 21,000 மும் கிடைக்கிறது எனக் கூறுகிறார். 2 வது ஏ.டி.எம். மாடலில் மாதம் ரூ. 15,000 லிருந்து 20,000 வரை கிடைப்பதாகக் கூறுகிறார். இவருடைய நாட்டுக்கோழிகள் மூலம் மாதம் ரூ. 5,000 வருமானம் கிடைப்பதாகக் கூறுகிறார். விவசாயத்திற்குத் தேவைப்படும் இயற்கை உரம், மூலிகைப்பூச்சி மருந்து தயார் செய்து தன் தோட்டத்திற்குப் பயன்படுத்தி பிறவி விவசாயிகளுக்கும் மாதம் ரூ. 5000க்கு விற்பனையும் செய்து வருமானம் எடுக்கிறார். மொத்தத்தில் மாதவருமானம் ரூ. 20,000 –ரூ. 40,000 வரை எடுப்பதாகக் கூறுகிறார்.
இவருடைய பண்ணையை ஆந்திரமாநில முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு பார்வையிட்டுச் சென்றுள்ளார். இவருடைய மாதிரிப் பண்ணையைப் போன்று பல்வேறு ஊர்களில் இயற்கை வேளாண்மை ஏ.டி.எம் பண்ணைகளை உருவாக்க முழு முயற்சியை அரசாங்கமே ஊக்குவித்து இவருக்கு மாதந்தோறும் ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.
திரு. கிருஷ்ணமூர்த்தி, செல் :9908898415

## இயற்கை முறையில் மாமரசாகுபடி



மாமரங்களில் பல இருந்தாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஏற்ற ரகங்கள் உள்ளன. அதில் விருதுநகர் மாவட்டம், மதுரை மாவட்டத்திற்கு சிறந்தது சப்பட்டை, பஞ்சவர்ணம், இமாம்பஸ், கிளிமூக்கு ஆகும். மற்ற ரகங்கள் அல்போன்சா, காசா, ருமானி, மல்கோவா ஆகியவை உள்ளன. மாமரங்கள் சாகுபடிக்கு நீர் தேங்காத செம்மண் மற்றும் வண்டல் மண் ஏற்றது. நல்ல சூரிய ஒளியும் காற்றோட்டமும் தேவை.
கன்றுகள் தேர்வு
மரக்கன்றுகள் ரகம் வாரியாக நடவு செய்ய வேண்டும். கன்றுகள் நடவு செய்ய 2X2X2 அடி நீளம், அகலம், ஆழம் குழி வெட்டி மக்கிய எரு இரண்டு கிலோ போட்டு சிறிது மண் போட்டு அதன் மேல் ஒட்டு மாங்கன்றுகள் நடவு செய்யலாம். மாங்கன்றுகளில் ஒட்டு பாகம் வரை மண் மூட வேண்டும். காரணம்

ஒட்டுப்பகுதிக்கு கீழே இருந்து தளிர் வந்தால் அது கொட்டை கன்று ஆகும். அப்படியே விட்டால் நல்ல ரக மாமரம் இல்லாமல் கொட்டை காய் வந்த ரகமாக வந்துவிடும். நடவு செய்த பின் உடனே தண்ணீர் விட வேண்டாம், அடுத்த நாளும் விட வேண்டாம், அதற்கடுத்த நாள் கண்டிப்பாக உயிர் நீர் விட வேண்டும். பின் மூன்று நாளைக்கு ஒருமுறை நீர் பாய்ச்சி வருவது நன்று. கன்றுகள் முதல் வருடத்திலேயே பூக்கள் வந்தால் உடன் பூக்களை நீக்க வேண்டும். கன்றுகள் இரண்டு வருடத்திற்கு பின் மூன்றாம் ஆண்டு காயப்புக்கு விட வேண்டும். மூன்றாம் ஆண்டுக்குப்பின் பூக்கள் வந்தால் இயற்கை உரம் கன்று ஒன்றிற்கு இரண்டு கிலோ போட்டு உடன் நீர் பாய்ச்சுவதால் பூ உதிராமல் பிஞ்சு பிடிக்கும். மீண்டும் சிறு பிஞ்சுகளாக இருக்கும்போது எரு குப்பை இரண்டு தட்டு போட்டு தண்ணீர் பாய்ச்சுவதால் பிஞ்சுகள் உதிராமல் காய்கள் பெருக்கும்.

**பூச்சி தாக்குதலுக்கு**

பழங்களில் புழுக்கள் வராமல்காக்க பழஈக்களை கட்டுப்படுத்த வேண்டும்.

1. மீன் அமிலம் தெளிக்கலாம். (100 மி.லி. கரைசலை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்).

2. பஞ்சகவ்யா கரைசலை டிசம்பர் மாதம் தெளித்தால் அதிக பூக்களை உருவாக்கலாம். (200 மி.லி. பஞ்சகவ்யா 10 லிட்டர் நீரில் கலந்து கொடுக்கலாம்).

3. பூ அரும்புகள் எடுத்தவுடன் தூவானம் போல் தண்ணீர் தெளித்தால் மகரந்தச்சேர்க்கையால் அதிக காய் பிடிக்கும்.

ஜெகந்நாதராஜா, இராஜபாளையம் நர்சரி,
168, மதுரை ரோடு, காட்டன் மார்க்கெட், இராஜபாளையம்–626117. செல் : 9842122866

## குஜராத் மாநில உத்திகள்

மாவுப்பூச்சி தாக்குதலுக்கு

தக்காளி, பருத்தி மற்றும் காய்கறிகளில் மாவுப்பூச்சியின் தாக்குதல், பெரிய தொல்லையாக உள்ளது. குஜராத் மாநிலம், பல்வா கிராமத்தில், ஜசுபாய் என்பவர் இந்த மாவுப்பூச்சிக்கு 1 கிலோ மஞ்சள் பூ பூக்கும் அரளி இலைகளை 5 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து சுமார் 4ல் 1 பங்கு வற்றும் வரைக் கொதிக்க விட்டு பின் குளிரவைக்கப்பட்ட கரைசலுடன் 100 கிராம் சோப்பு பவுடரைச் சேர்க்கிறார். இதனை ஒன்றாக கலக்கிய பின் ஒரு பம்புக்கு 100–150 மி.லி வீதம் தெளிக்கிறார். மாலையில் வயல்வெளியில் தெளித்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது. 7 நாட்கள் இடைவெளியில் 2 தடவை தெளித்து வந்தால் மாவுப்பூச்சியின் தாக்குதல் வெகுவாகக் குறைகிறது.

**கால்நடைகளின் வயிற்றுப்போக்கிற்கு**

கெட்டுப் போன தானியங்கள், மழைக்காலங்களில் அளவுக்கு அதிகமான ஈரப்பதம் உள்ள புல்லை மேய்தல், மண் கலந்த இலை தழைகளை (புல்) மேய்வது போன்றவற்றால் வயிற்றுப்போக்கு நோயால் கால்நடைகள் பாதிக்கப்படுகிறது. இது போன்ற சமயங்களில் ஜசபாய் ஊமத்தை இலைகளில் நெய் தடவி ரொட்டியின் மீது சுற்றி பெரிய மாடுகளுக்கு உணவாகக் கொடுத்து வருகிறார். இதனால் கால்நடைகளின் வயிற்றுப்போக்கு சரியாகி நல்ல பலன் கிடைக்கிறது. கன்றுகளுக்கு, சில ஊமத்தை இலைகளைக் கொண்டு இதே போல் கொடுத்து வருகிறார். பக்க விளைவுகள் ஏதும் இல்லை எனக் கூறுகிறார்.

**மாட்டு சளிக்கு :**

ஜாம் நகரைச் சேர்ந்த பச்சார்பால் ரெட்டிலால் பிமானி என்பவர், இரசாயன உரங்கள் ஏதுமின்றி கடந்த 7 வருடங்களாக 2.6 ஏக்கரில் விவசாயம் மற்றும் கால்நடைகளை வளர்த்து வருகிறார். மாட்டு சளிக்கு 2 சிறிய தேக்கரண்டி மஞ்சள் பவுடருடன், 500 கிராம் சர்க்கரையை கலந்து தினமும் 2 முறை உள்ளுக்குக் கொடுத்து வருகிறார்.

**மாட்டு கழிச்சலுக்கு:**

சீரகத்தூள் 2 தேக்கரண்டி, துளசி இலைகள் 200 கிராம் அரைத்து தயிருடன் கலந்து இருவேளை கொடுக்கிறார். கர்ப்பப்பை வெளியே தள்ளினால் கரும்பின் நுனி சோகை இலைகளை கன்று ஈன்ற பின்பு கொடுத்து வருகிறார். கன்றுக்குட்டிகளின் குடற்புழுவிற்கு, மஞ்சள் தூள், சீரகத்தூள் சிறிது மோரில் கலந்து கொடுக்கின்றார். மடி வீக்கத்திற்கு வாழைப்பழத்தில் சூடம் (கற்பூரம்) வைத்து 3 நாட்கள் உண்ணக் கொடுக்கிறார். வெளிப்பூச்சாக கற்றாழைச்சாறு, மஞ்சள் பொடியுடன் உப்பைக் கலந்து நோய் பாதித்த மடியில் வெளிப்பூச்சாக பூச வேண்டும்.

பச்சார்பாய் ரெட்டிலால் பிமானி
குண்டல் கிராமம், ஜோடியா தாலுகா,
ஜாம்நகர் மாவட்டம். குஜராத்

**மாடு சினை பிடிக்க**

கால்நடைகள் சில சமயங்களில் சரியாகக் கருத்தரிப்பதில்லை. நோய்த்தாக்குதல் சரியான ஊட்டச்சத்து இல்லாமை மற்றும் வேறு சில காரணங்களாகவும் இருக்கலாம். கருவுறுதலை அதிகரிக்கக் கரம்சிபாய் என்பவர் மஞ்சள் தூள் உபயோகப்படுத்துகிறார்.மாட்டிற்கு சினை ஊசி போடுவதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன் 100 கிராம் மஞ்சள் தூளுடன் 500 மி.லி எருமைப் பால் கலந்து வாய்வழியே கொடுக்கிறார். இதன் மூலம் கருத்தரிப்பு விகிதம் கூடுகிறது.

கரமிசுபாய் ரபாரி
மேனாகிபூர் கிராமம், மான்சா தாலுகா, காந்திநகர்

## கழுதை வளர்ப்பில் வருமானம் பெறுதல்



திருவண்ணாமலை மாவட்டம், வடமனபாக்கம் கிராமத்தில் திரு. சுபான் (வயது 58). இவர் கடந்த 5 வருடங்களாக 5 கழுதைகளை பராமரித்து வருகிறார். இவரது பூர்வீகம் வேலூர் மாவட்டம் குருவராஜ் பேட்டை. இவர் தனது சொந்த ஊரில் சலவைத் தொழில் (அயன் வேலை) பார்த்து வந்தார். பின்னர் வடமனபாக்கம் ஊருக்கு வந்து விட்டார். இங்கு கழுதைப்பால் விநியோகித்து வருமானம் ஈட்டுகிறார். குழந்தைகளுக்கு பிறந்த உடன் "சவாப்பு" என்ற குறைபாடு தென்படும். அதாவது உடல் முழுவதும் நீல நிறமும் ரோஸ் நிறமும் கலந்து காணப்படும். இதற்கு பிறந்த 3 நாட்களில் கழுதைப் பால் ஒரு பாலாடை (சக்கு) அளவு கொடுத்து வர வேண்டும். இதனால் குழந்தைக்கு உடனே நிறம் மாறி விடும். 3 பாலாடைக்கு ரூ. 500 பெற்றுக்கொள்கிறார். ஒரு கழுதையிலிருந்து சுமார் 200 மி.லி பால் கறந்துவிடுகிறார்.

பால் தேவைப்படுவோர் வரும் நேரத்தில் அப்பொழுதே உடனுக்குடன் கறந்து கொடுக்கிறார். மற்ற நேரங்களில் கழுதை குட்டிகளுக்கு குடிக்க விடுகிறார். கழுதை பால் அருந்துவதால் குரல் வளம் கூடும் என்று அனுபவத்தில் கூறுகிறார். கழுதைப் பாலை ஒரிரு நாள் கெடாமல் வைக்க சில நெல்மணிகளை பாலில் போட்டு வைக்கின்றனர்.

திரு. சுபான், அண்ணாநகர் – 2
வடமனபாக்கம், ஆற்காடு (வழி), செய்யாறு தாலுகா
திருவண்ணாமலை மாவட்டம். செல் : 7530075371

## மேய்ச்சலிய உயிர்மப் பொருளாதாரமும் கரிமக் குறைப்பும் உலகளாவிய மாநாடு




இந்தியா மற்றும் உலகளவில் கிராமப்புறவாழ்வாதாரம், சூழலியல் பாதுகாப்பு, மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தின் முதுகெலும்பாக மேய்ச்சலியம் (Pastoralism) திகழ்கிறது. கடந்த சில பத்தாண்டுகளில், காலநிலை மாற்றம், நிலச்சீரழிவு, பொருளாதார அழுத்தங்கள், மற்றும் பாரம்பரிய அறிவுச்சிதைவு போன்ற சவால்கள் சமுதாயத்தை அச்சுறுத்துகின்றன. இச்சவால்கள், சூழலமைப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், குறைந்த கார்பன் மற்றும் உயிர்மப் பொருளாதார (Bio-Economy) அடிப்படையிலான நிலையான தீர்வுகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

மேய்ச்சலில் உயிர்மப் பொருளாதாரம் மற்றும் கரிமக் குறைப்பு குறித்த சர்வதேச மாநாடு. அதிகாரிகள் கொள்கை வடிவமைப்பாளர்கள், ஆய்வாளர்கள், மேய்ச்சல் சமூகத்தினர் மற்றும் தொழில் முன்னோடிகளை ஒரே இடத்திற்கு கொண்டு வந்து,

மேய்ச்சலியத்துடன் பாரம்பரிய கால்நடை மருத்துவம், உயிர்மப் பொருளாதார மாதிரிகள் மற்றும் தூய்மையான ஆற்றல் தீர்வுகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் புதுமைகள் மற்றும் யுக்திகளை வெளிப்படுத்துகின்றது. மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகங்களின் சர்வதேச ஆண்டு (International Year for Rangelands Pastoralists 2026) நெறிமுறைகளுடன் இணைந்து நடைபெறும். இந்த மாநாடு மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகங்களின் நிலைத்த முன்னேற்றத்திற்கு வழிகோலும். மேலும் குறைந்த கார்பன், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காமல் மேய்ச்சல் உயிர்மப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான நடைமுறை அறிவைப் பகிரும் தளமாகவும் செயல்படும். இந்த மாநாடு 5.12.2025 அன்று சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் கிடைக்காரர்களின் இருப்பிடத்தையும், நீர்நிலைகளையும், வானிலை அறிவிப்பையும் தெரிந்து கொள்ள ''கிடைக்காரர் துணை'' என்ற செயலி வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சியை தொழுவம் அமைப்பும் தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமும் இணைந்து ஏற்பாடு செய்தது.

மேலும் விபரங்களுக்கு

திரு. கபிலன், தொழுவம், மதுரை. செல் : 9894406111

## சொட்டு நீர் பாசனத்திற்கு பயன்படும் ஆட்டோமேட்டிக் மல்டிபிள் வால்வு





இந்த வால்வு செயல்படும் முறையானது மிக எளிதானது. இந்தியா ஒரு விவசாய நாடு இந்தியாவில் சுமார் 10 கோடி குடும்பங்களுக்கு மேல் விவசாய நிலம் வைத்து விவசாயம் செய்து வருகிறார்கள். விவசாயத்தில் நீர் பாய்ச்சுவது மிக முக்கியமான அங்கம் ஆகும். கிணறு மற்றும் போர்வெல்களில் இருந்து தண்ணீர் எடுத்து விவசாய நிலங்களில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மோட்டார் மூலம் கிணறுகளில் இருந்து வெளியே எடுக்கப்படும் தண்ணீரை நமக்குத் தேவையான இடத்தில் பாய்ச்சுவதற்கு வால்வுகள் மிக முக்கியமாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தேவையான தண்ணீர் பாய்ச்சிய பின் அடுத்த இடத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு நாம் வால்வுகளை திருப்பி விட வேண்டும். தற்போது தேவையான இடத்திற்கு மொபைல் ஆப்பரேட்டிங்மூலம் ஆட்டோமேட்டிக்காக திருப்பிக் கொள்ளும் வால்வுகள் உள்ளன. இந்த வால்வுகள் ஒவ்வொன்றும் சுமார் ரூ. 10,000க்கும் அதிகமான விலை உள்ளது. ஒரு விவசாயி நிலத்தில் ஆறு இடங்களில் தண்ணீரை திருப்பி விட வேண்டும் எனில் அதற்கு ஆறு வால்வுகளை பொருத்த வேண்டும். அந்த ஆறு வால்வுகள் மற்றும் அதற்கான கண்ட்ரோலரும் சேர்ந்து பொருத்த வேண்டுமெனில் சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கும் அதிகமாக செலவாகிறது. சாதாரண நடுத்தர விவசாயிகளால் அவ்வளவு செலவு செய்து வால்வுகளை பொருத்த முடிவதில்லை. நான் தற்போது மெக்கானிக்கல் முறையில் இயங்கும் ஆட்டோமேட்டிக் வால்வை கண்டுபிடித்துள்ளேன். நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஒரு பெரிய குழாய்க்குள் மோட்டாரில் இருந்து வரும் தண்ணீர் உள்ளே செல்லும். அதே குழாயில் தண்ணீர் வெளியேறும் ஆறு வழிகள் உள்ளன. குழாய்க்குள் உள்ள புதிய மெக்கானிசத்தை ஆட்டோமேட்டிக் கண்ட்ரோலர் மற்றும் மோட்டார் மூலம் இயக்கி நாம் தேவையான நேரத்துக்கு தேவையான வழியில் தண்ணீரை அனுப்பிக்கொள்ளலாம். இந்த தண்ணீர் வெளியேறும் ஆறு குழாய்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கிக் கொள்ளவும் முடியும். நான் புதிதாக வடிவமைத்துள்ள ஆட்டோமேட்டிக் வால்வுகள் அனைத்தும் ஒரே குழாய்க்குள் இயங்குவதாலும் இவ்வால்வுகளை இயக்க ஒரு கண்ட்ரோலர் மற்றும் ஒரு மோட்டார் மட்டுமே தேவைப்படுவதாலும் இதைக் குறைந்த விலையில் விவசாய பயன்பாட்டிற்கு கொண்டுவர முடியும். அத்துடன் இந்த வால்வுகள் மெக்கானிக்கல் முறையில் இயங்குவதால் பல ஆண்டுகளுக்கு பழுதடையாமல் இயங்கும். எனவே இந்த புதிய

ஆட்டோமேட்டிக் வால்வு விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாடு முழுவதும் உள்ள சுமார் 10 கோடிக்கும் அதிகமான விவசாயிகளும் வரும் காலங்களில் இந்த வால்வுகளை பயன்படுத்தி சிறப்பாக விவசாயம் செய்ய முடியும். முதலில் கிணறு அல்லது போர்வெல்லில் இருந்து தண்ணீரை வெளியே எடுக்க மோட்டாரை மொபைல் ஆப் மூலம் ஆன் செய்கிறோம். தண்ணீர் வெளியே எடுக்கும் மோட்டார் ஆன் ஆகும் போதே நான் புதிதாக வடிவமைத்துள்ள மெக்கானிக்கல் ஆட்டோமேட்டிக் இரிகேசன் சிஸ்டத்தின் கண்ட்ரோலரும் ஆன் ஆகும். இந்த திட்டத்தில் நிலையான ஒரு குழாயில் தண்ணீர் உள்ளே சென்று குழாய்க்குள் நடக்கும் இயந்திரவியல் செயல்பாடு காரணமாக அதே குழாயில் பல எண்ணிக்கையில் தண்ணீர் வெயியேறுகிறது. இது புதிய கண்டுபிடிப்பு ஆகும். இந்த மெக்கானிசம் கண்ட்ரோலர் மற்றும் மோட்டார் மூலம் இயக்கப்படுகிறது. விவசாய நிலத்தில் தண்ணீர் தேவைப்படும் பகுதி அடுத்தடுத்தும் இருக்கலாம். ஒரு இடத்துக்கு அடுத்து ஒன்று அல்லது இரண்டு இடங்கள் விட்டு அடுத்ததாகவும் இருக்கலாம். அதேபோல் தண்ணீர் தேவைப்படும் நேரமும் ஒவ்வொரு இடத்துக்கும் வேறு வேறு அளவுகளிலும் இருக்கலாம். இவை அனைத்தையும் கண்ட்ரோலர் மூலம் பயன்படுத்துபவரின் தேவைக்கேற்ப எளிதாக செய்து கொள்ள முடியும். இந்த புராஜக்ட்டை நான் MS Material உபயோகப்படுத்தி எங்கள் கிராமத்தில் உள்ள லேத் ஒர்க்சாப்பில் செய்ததால் இரண்டு சதவிகித தண்ணீர் லீக் வருகிறது. PVC, UPVC, PP போன்ற மெட்டீரியல்களை உபயோகப்படுத்தி மோல்டிங் மூலம் கம்பெனி தயாரிப்பாக செய்தால் தெளிவாகவும் எடை குறைவாகவும் தண்ணீர் கசியாமலும் இருக்கும்.

திரு. சுப்பிரமணியன்,
சென்னிமலை
ஈரோடு மாவட்டம்.
செல் : 9842833887

**தேற்றாங்கொட்டையில் புத்துணர்ச்சி பானம்**



எனது தாத்தா விவசாயி. அப்பாவுக்கு விவசாயத்தில் ஆர்வம் கிடையாது. டெய்லர் கடை வைத்திருந்தார். நான் 12 ஆம் வகுப்பு வரைக்கும் படித்துவிட்டு, சவுதி அரேபியாவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் 30 வருடம் வேலை பார்த்தேன். செரிமானக்கோளாறு, அல்சர், மூட்டு வலி, ரத்தக்கொதிப்பு உள்ளிட்ட பாதிப்புகளால் கிட்டத்தட்ட 15 வருடங்கள் ரொம்ப சிரமப்பட்டேன். அலோபதி மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டுப் பார்த்தும் பலன் இல்லை. அதனால், உடல் சூடு, வயிற்றுப் புண் இது மாதிரியான பிரச்சனைகள் ஏற்பட்டதுதான் மிச்சம். சவுதி அரேபியாவில் நான் பார்த்து வந்த வேலையைச் சில வருடங்களுக்கு முன் ராஜினாமா செய்துவிட்டு, சொந்த ஊருக்கு திரும்பி வந்து, இங்கேயே நிரந்தரமாக வசித்து வருகிறேன். அல்சர், ரத்தக்கொதிப்பு உள்ளிட்ட பிரச்சனைகளைக் குணப்படுத்த பாரம்பரிய மருத்துவர்களை அணுகினேன். அவர்கள் சொன்ன ஆலோசனை களின் படி மருந்தில்லா மருத்துவம், உணவே மருந்து என்ற முறையைக் கடைப்பிடித்தேன். அடுத்த சிறிது நாட்களிலே உடல் உபாதைகள் குணமாகி விட்டது. இதனால் இயற்கை மருத்துவம், பாரம்பரிய உணவு முறைகளில் எனக்கு ஆர்வம் அதிகம் ஏற்பட்டது. சேலம் மாவட்டம், சங்ககிரியில் உள்ள அகத்திய மகரிஷி ஒருங்கிணைந்த பாரம்பரிய நாட்டு மருத்துவர்கள் சங்கம் நடத்திய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அதன் மூலம், பல சித்த மருத்துவர்களோட அறிமுகம் கிடைத்தது. அவர்களிடம் உரையாடியபோது தேற்றாங் கொட்டையின் மகத்துவத்தை பற்றி அறிந்து கொண்டேன். நீர்நிலைகள் தண்ணீரைச் சுத்திகரிக்க, தேற்றாங்கொட்டையைத்தான் நம் முன்னோர்கள் பயன்படுத்தினார்கள்.

பழங்காலத்தில் கடல் பயணம் செல்பவர்கள் பல நாட்களுக்குத் தேவையான குடிநீரைக் கொண்டு செல்வதற்கான வசதிகள் அப்போது இல்லாததினால் தேற்றாங்கொட்டை மூலம், கடல்நீரைச் சுத்திகரித்து, அதில் உள்ள உப்புத்தன்மையைப் போக்கி, பயன்படுத்தியதாக சொல்லப்படுகிறது.

மண்பானையை ஈரப்படுத்தி, அதில் தேற்றாங்கொட்டையைத் தேய்த்து வெயிலில் காய வைப்பார்கள்.இது போல் 2 முறை செய்துவிட்டு, பிறகு, தண்ணீரை அதில் ஊத்தி வைப்பார்கள்.

தண்ணீரை மட்டுமல்லாது மனித உடலில் உள்ள ரத்தத்தையும் சுத்திகரிக்கக் கூடிய ஆற்றல் கொண்டது. தேற்றாங்கொட்டை இதனால், தான் சித்த மருத்துவத்தில் தேற்றாங்கொட்டை பயன்படுத்தப்படுவது. தேறாத உடம்பையும் தேற்றக்கூடியது. சிறுநீரகத்தில் ஏற்படக்கூடிய கோளாறுகளை இது குணப்படுத்தும். உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் பலவிதமான நன்மைகள் தரக்கூடிய தேற்றாங்கொட்டையைப் பயன்படுத்திப் புத்துணர்ச்சி பானம் தயார் செய்யலாம். காபியில் உள்ள அதே வாசனை இதில் கிடைக்கும்.

தேற்றாங்கொட்டையைக் சுத்தப்படுத்தி வறுத்தெடுத்து பொடி தயார் செய்யலாம். சோதனை முயற்சியில் குறைவான அளவு தயார் செய்து சுடு தண்ணீரில் போட்டு, அதோடு நாட்டுச்சர்க்கரை கலந்து குடித்து பார்த்தேன். நல்ல சுவையாகவும் வாசனையாகவும் இருந்தது. வழக்கமான காபி குடிக்கும்போது எந்தளவுக்குப் புத்துணர்ச்சி கிடைக்குமோ, அதே அளவுக்கு இதிலும் புத்துணர்ச்சி கிடைத்தது.

அதற்குப் பிறகு தினந்தோறும் தொடர்ச்சியாக இந்த காபியைக் குடிக்கத் தொடங்கினேன். உடம்பு நல்ல சுறுசுறுப்பாக இருந்தது. உடல் சூடு தணிந்தது. இதில் என்னென்ன சத்துக்கள் அடங்கியிருக்கிறது என்று தெரிஞ்துகொள்வதற்காக தஞ்சாவூரில் இயங்கி வரும் தேசிய உணவு தொழில்முனைவோர் மேலாண்மை நிறுவனத்தில் கொடுத்து ஆய்வு செய்தேன். புரதச்சத்து, நார்ச்சத்து, இரும்புச்சத்து, கால்சியம் உள்ளிட்டவைகள் அடங்கி உள்ளது.

தோற்றாங்கொட்டை காபி குடிப்பதினால், எனக்கு ஒரு பக்கவிளைவும் ஏற்படவில்லை என்று உறுதியான பிறகு குடும்பத்தில் உள்ளவர்களும் இதைக் குடிக்கத் துவங்கினார்கள். கிட்டத்தட்ட ஒரு வருடம் நானும் என் குடும்ப உறுப்பினர்களும் இதைத் தொடர்ச்சியாக குடித்துப் பார்த்தோம். நல்ல பலன் கிடைத்தது என்று உறுதியான பிறகுதான் நண்பர்கள் உறவினர்களுக்கு இதை விற்பனை செய்யத் தொடங்கினேன். நல்ல வரவேற்பு இருந்தது. கடந்த 2 வருடமாக தேற்றாங்கொட்டைக் காபிப்பொடி தயார் செய்து விற்பனை செய்கிறேன்.

தேற்றாங்கொட்டையின் மகத்துவங்கள் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தேற்றான் மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய விதை தான் தேற்றாங்கொட்டை என்று சொல்கிறோம். தேனி, திருநெல்வேலி, சிவகங்கை உள்ளிட்ட பகுதிகள் தேற்றான்மரங்கள் இருக்கிறது. அதைச் சேகரித்து விற்பனை செய்வதற்காக நபர்கள் அந்தப் பகுதிகளில் இல்லை. இது மட்டுமல்லாமல் அந்தந்த பகுதிகள் கிடைக்கக்கூடிய தேற்றாங்கொட்டைகளை புத்துணர்ச்சி பானம் தயார் செய்வதற்கு தேவையான தரமும் இல்லை. குஜராத், இமாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் இருந்து தேற்றாங் கொட்டைகளை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து பொடி தயார் செய்து விற்பனை செய்கிறேன்.

70 கிராம் தேற்றாங்கொட்டை பொடி நிரப்பப்பட்ட ஒரு பொட்டலம் ரூ. 150 க்கு விற்பனை செய்கிறேன். முதலில் ஒரு டம்ளர் (200 மி.லி) காபி தயாரிக்கலாம். வழக்கமான காபி தயாரிக்கத் தேவைப்படும் அளவை விடவும் தேற்றாங்கொட்டை காபி தயாரிக்க மிகக் குறைவான அளவுதான் பொடி தேவைப்படும். ஒரு டம்ளர் காபி போட, முக்கால் கிராம் தேற்றாங்கொட்டை பொடியே போதுமானது தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து, அதில் இந்தப் பொடியை போட்டு, நாட்டுச்சர்க்கரை அல்லது வெல்லம் கலந்து இதைக் குடிக்கலாம்.

இதைத் தயார் செய்த உடனே குடிக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. பல மணி நேரம் வைத்திருந்தாலும் கூட கசப்புத்தன்மை ஏற்படாது. நேரம் ஆக ஆக கடினத் தன்மை அதிகரிக்கும். இந்தப் பொடியை பாலில் கலந்தும் குடிக்கலாம். இந்தப் பொடியை எவ்வளவு நாட்கள் வேண்டுமென்றாலும் வைத்திருந்து பயன்படுத்தலாம். இதன் வீரியத்தன்மை குறையாது.

குஜராத், இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள்

தேற்றாங்கொட்டை ஒரு கிலோ சராசரியாக ரூ. 800 விலை கொடுத்த வாங்குகிறேன். அதைத் தண்ணீர்ல போட்டு நன்றாகக் கழுவி சுத்தப்படுத்தி, நிழலில் உலர்த்தி , அதன் பிறகு பாலில் ஊற வைத்து, அதைப் பதப்படுத்திய பிறகு, சரியான பதத்தில் வறுத்தெடுத்து, மெஷின் மூலம் அரைத்து பொடியாக்கி பொட்டலம் போட்டு விற்பனை செய்கிறேன்.

ஒரு கிலோவுக்கு ரூ. 1,800 – 2000 ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் எல்லாச் செலவுகளும் போக, ஒரு கிலோவுக்கு 500ரூபாய் வருமானம் கிடைக்கும். ஒரு மாதத்திற்கு 30–40 கிலோ தேற்றாங்கொட்டை காபி பொடி விற்பனை செய்வது மூலமாக, 15,000 – 20,000 ரூபாய் வருமானமும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

முகமது அன்வர். செல் : 6385781410

## கால்நடை மூலிகை வைத்திய முகாம்



திருவண்ணாமலை, செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் கால்நடை மூலிகை வைத்திய முகாம்களை திரு. ரஞ்சித் நடத்தி வருகிறார். இந்த முகாம்களை நடத்துவதற்கு உழவர்பூமி என்ற பால் கொள்முதல் செய்யும் நிறுவனம் உறுதுணையாக உள்ளது. திரு. ரஞ்சித் வந்தவாசியிலிருந்து பல இடங்களுக்கு சென்று வருகிறார். இவர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கும், கால்நடை மூலிகை வைத்ய தயாரிப்புகளை செய்வதற்கு பயிற்சியும் அளிக்கிறார். பால்மாடுகள் அதிகம் உள்ள கிராமங்களில் மாதத்தில் ஒரு தடவை அல்லது அவ்வப்பொழுது முகாம்கள் நடத்தி மூலிகை வைத்திய பொருட்களை விநியோகம் செய்து வருகிறார். கால்நடை வளர்க்கும் விவசாயிகள் இதனை விலைக்குப் பெற்றுக்கொள்கின்றனர்.



இவர் மூலிகை மசாலா உருண்டை, குடல்புழு நீக்க மருந்து, மத்தான் தைலம் முதலான மருந்துகளை ஆங்காங்கே புதிதாகத் தயாரித்து கொடுக்கின்றார். இவருடைய அனுபவத்தில் கானை நோய், அம்மை நோய், கழிச்சல் போன்றவற்றிற்கு குறைந்த செலவில் குணமாவதாகக் கூறுகிறார். இதனால் கிராம மக்கள் இவரிடம் மூலிகை வைத்தியப் பொருட்களை கொடுப்பதற்கு ஆர்டர் கொடுக்கின்றனர். ஆங்கில மருத்துவத்தில் அதிக செலவு செய்தும் குணமாகாத கால்நடைகளுக்கு இவருடைய தீர்வுமுறை மக்களுக்கு பிடித்துள்ளது. இவர் முழு நேர பணியாகச் செய்து வருகிறார். இவருடன் 4 மகளிர் உறுப்பினர்கள் உறுதுணையாக இருந்து வருமானம் ஈட்டுகின்றனர். இத்தொழிலை பழகிக்கொண்டால் மாதத்திற்கு ரூ. 10,000லிருந்து 15,000 வருமானம் ஈட்ட முடியும் எனக் கூறுகின்றார்.

திரு. ரஞ்சித், வந்தவாசி. செல் : 93453 98238

## மேலசெல்வனூர் கருப்பசாமியின் புதிய கால்நடை வாகன வடிவமைப்பு

திரு. கருப்பசாமி வயது 48. இவர் ஆடு மற்றும் மாடு போன்ற கால்நடைகளை எடுத்துச் செல்லும் தேவையை உணர்ந்து, அதற்கென தனியாக ஒரு லாரி வாங்கியுள்ளார். இந்த லாரியின் மதிப்பு சுமார் ரூ. 20 லட்சம் ஆகும். மேலும் கால்நடைகளை பாதுகாப்பாகவும், சீராகவும் எடுத்துச் செல்லும் வகையில் அதற்குக் கூடுதலாக ரூ. 4 லட்சம் செலவில் சிறப்பான பாடி கட்டமைப்பு அமைத்துள்ளார். இந்த அமைப்பை நயினார்கோவில்புதூர் லேத்காரர் மூலம் செய்துள்ளார். இதில் 200 ஆடுகளை

ஏற்றிச்செல்லலாம். இதில் இலகுவாக ஏற்றலாம் இறக்கலாம். இந்த லாரியை அவர் தனது சொந்த பயன்பாட்டிற்கும் மற்றும் வாடகை சேவைக்கும் பயன்படுத்துகிறார். குறிப்பாக கால்நடைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல விரும்பும் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இது பெரிதும் பயனளிக்கும்.

திரு. கருப்பசாமி,
மேல செல்வனூர்,
கடலாடி தாலுகா
இராமநாதபுரம் மாவட்டம் –623703
செல் : 9787326970

## சினை பிடிக்காத மாடுகளுக்கு முருங்கை இலையுடன் கூடிய மூலிகை மருத்துவ முறை

முள்ளங்கி (1–4 நாட்கள்) : தினமும் காலை ஒரு முள்ளங்கி, மாலை ஒரு முள்ளங்கி என 4 நாட்களுக்கு

சோற்று கத்தாழை (5–8 நாட்கள்): தினமும் காலை ஒரு மடல் மாலை ஒரு மடல் என 4 நாள்களுக்கு

முருங்கை இலை: (9–12 நாட்கள்) தினமும் காலை 4 கைபிடி அளவு மாலை 4 கைபிடி அளவு என 4 நாள்களுக்கு

பிரண்டை : (13–16 நாட்கள்) தினமும் காலை 4 கைப்பிடி அளவு மாலை 4 கைப்பிடி அளவு என 4 நாட்களுக்கு

கறிவேப்பிலை : (17–20 நாட்கள்) தினமும் காலை 4 கைப்பிடி அளவு மாலை 4 கைப்பிடி அளவு என 4 நாள்களுக்கு

இந்த 20 நாள்கள் மருத்துவத்தில்: முள்ளங்கி மற்றும் சோற்றுக் கற்றாழை கொடுக்கும் பொழுது அவற்றின் மேல் வெல்லம் மற்றும் சமையல் உப்புத் தடவி வாய் வழியே கொடுக்க வேண்டும். முருங்கை இலை, பிரண்டை மற்றும் கறிவேப்பிலையைக் கொடுக்கும் பொழுது மைய அரைத்து வாய் வழியே கொடுக்க வேண்டும்.

புண்ணிய மூர்த்தி.
கால்நடை வேளாண்மை புத்தகம்
ஜனவரி மாத இதழ் 2026

## இயற்கை முறை சோயாபீன்ஸ் சாகுபடி



தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அணைக்கரை கிராமத்தில் திரு. பிரபாகரன் (வயது 33) 10 வது வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். நெல் அறுவடையான பின் தை மாதத்தில் 2 வது போகமாக சோயாபீன்ஸ் சாகுபடி செய்து வருகிறார். சோயாபீன்ஸ் அதிகமாக மத்தியபிரதேசத்தில் பயிர் செய்யப்படுகிறது. இதில் நல்ல வருமானம் கிடைத்தாலும் தமிழ்நாட்டில் இதன் சாகுபடி குறைவுதான். இவர் இயற்கை முறை சாகுபடியில் 1/2 ஏக்கரில் 6 குவிண்டால் மகசூல் எடுப்பதாகக் கூறுகிறார்.



நெல் அறுவடைக்குப்பின் 2 உழவு செய்து பின் சோயாபீன்ஸ் விதைக்கிறார். இந்த சோயாபீன்ஸ் ரகம் 100–110 நாட்கள் கொண்டதாகும். ஆடி, மாசி பட்டம் ஏற்றதாகும். இறவையில் ஏக்கருக்கு 30 கிலோ விதை தேவைப்படும். விதைத்தபின் கரும்பிற்கு பார்கட்டுவது போன்ற கொக்கி கலப்பையை டிராக்டரில் இணைத்து பார் போடுகிறார். பாரின் அகலம் 1.5 அடி, உயரம் 3/4 அடி. விதைத்தபின் 5

வது 7 வது நாளில் நீர் பாய்ச்ச வேண்டும். பின் வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. விதைத்த 20 வது நாளில் மீன்அமினோஅமிலம் ஒரு டாங்கிற்கு (16 லிட்டர் நீரில்) 150 மி.லி. வீதம் கலந்து ஏக்கருக்கு 10 டேங்க் தெளிக்க வேண்டும். 40 வது நாளில் பூச்சி, நோய் தாக்குதலுக்கு வேப்பங்கொட்டை 2 கிலோவை இடித்து 5 லிட்டர் நீரில் நாள் முழுவதும் ஊற வைத்து பின் வடிகட்டி டாங்கிற்கு 500 மி.லி. வீதம் கலந்து தெளிக்கிறார். பின் 60 வது நாள் மீன்அமினோஅமிலம் கலந்து ஒரு டேங் நீருக்கு 150 மி.லி. வீதம் கலந்து பயிருக்கு தெளிக்கிறார்.

இவர் களையெடுப்பு செய்வதில்லை. ஏனெனில் ஆரம்ப கட்டத்தில் களையும் பயிரும் ஒன்றாக வளர்ந்து வரும். 50 வது நாளில் களையை மிஞ்சி பயிர் கூடுதலாக வளர்ச்சியடையும். இதனால் பயிரின் நிழலில் களைச்செடிகள் அவிந்து மடிந்து விடும். பயிரில் வேர் முடிச்சுகள் உள்ளதால் நல்ல உரத்தை மண்ணிற்கு அளிக்கும். 80 வது நாளில் பயிரிலுள்ள இலைகள் கொட்டி நல்ல மூடாக்காக வந்து விடும். ஒரு செடிக்கு 100–200 காய்கள் கொத்து கொத்தாகக் காய்க்கும். ஒரு காயில் 2–3 விதைகள் உண்டு. இவர் அறுவடைக்கு 15 ஆட்கள் விட்டு பின்னர் காய்களை களத்தில் குவித்து மூட 6 ஆட்கள் வரை கூலி வேலைக்கு பேசி விடுகிறார். குவிண்டால் ரூ. 6000 வரை விற்பனை செய்கிறார். இயற்கை முறை சாகுபடியில் அதிக விளைச்சலும் அதாவது ஏக்கருக்கு 12 குவிண்டால் வரை எடுக்கிறார்.

நிலத்தை சுற்றி சோளம், செவ்வந்திப்பூ, கொத்தவரை, வெண்டிக்காய் சாகுபடி செய்து பூச்சி கட்டுப்பாடு இயற்கை வழியில் நடப்பதற்கு உதவுகிறார். இம்முறையில் வீட்டிற்கு தேவைப்படும் காய்கறிகளும் கிடைத்து விடும்.

சோயாபீன்ஸ் அறுவடைக்குப்பின் நெல் அறுவடை இயந்திரம் மூலம் விதைகளை நெற்றிலிருந்து பிரிக்கும் சமயம் கிடைக்கும். பொட்டு கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகும். விதைகளை சலித்து விற்பனை செய்யும் சமயம் மிஞ்சும் பொக்கு விதைகளை (கழித்தது) தூளாக்கி மாட்டிற்கு 1/2 கிலோ அளவு கொடுத்து வந்தால் பாலின் அளவும், தரமும் கூடும்.

கு. பிரபாகரன்
கீழத்தெரு, மனக்குண்ணம், அணைக்கரை,
திருவிடைமருதூர் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்
செல் : 9659935506
நன்றி : (AIR Karaikal)

## பலாராம்சாகுவின் கால்நடை மூலிகை வைத்ய அனுபவங்கள்



திரு. பலாராம்சாகு ஒரிசாவில் கால்நடைதுறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டார். இவர் 20 ஆண்டுகளாக பணியில் இருக்கும் போது பின் ஓய்வு பெற்ற பின்பும் கால்நடைகளுக்கு மூலிகை வைத்ய முறைகளை மக்களுக்கு கற்பித்து பரப்பி வருகிறார். இவர் நடமாடும் மூலிகை வைத்ய பள்ளி என்ற இயக்கம் மூலமாக பல கிராமங்களில் சென்று கால்நடை வளர்ப்போர், மகளிர் குழு உறுப்பினர்களை அனுகி பாரம்பரிய கால்நடை வைத்ய முறைகளை கடைபிடிக்க ஊக்குவிக்கிறார். இவர் பின்பற்றும் சில வைத்ய முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**உண்ணிகள் மற்றும் பேன்கள்**

தொற்று நோயின் அறிகுறிகள்: உடலில் ரத்த குறைவு, உடலில் உள்ள தோல் வறண்டு காய்ந்தும் காணப்படுவது.

நோயின் காரணிகள்:

உண்ணிகள் மற்றும் பேன்களின் தொற்று, கோசாலையில் உண்ணிகள் மற்றும் பேன்களின் இருப்பு, பசு கொட்டகையில் சுகாதார குறைபாடு.

நோய்க்கான மருத்துவம் :

புகையிலை 300 கிராம் எடுத்து 2 லிட்டர் நீரில் இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். காலையில் அந்த

நீரில் இருந்து புகையிலை எடுத்து கையால் நசுக்கிப் பிழிய வேண்டும். இதன் பிறகு, அந்த நீரை ஒரு சுத்தமான துணியில் வடிகட்டி ஒரு துணியின் உதவியினால் கால்நடைகளின் உடலைத் துடைக்க வேண்டும். 2 மணி நேரத்திற்கு பிறகு நல்ல நீரில் குளிக்க வைக்க வேண்டும். புகையிலை நீரை தடவிய பிறகு கால்நடைகளை நிழலில் இருக்க வைக்கவேண்டும். வெயிலால் உடலில் கேடு ஏற்படும்.

**தோலில் ஒட்டுண்ணிகளின் தொற்று**

நோயின் அறிகுறிகள் :

உடல் தோலின் மேல் ஒட்டுண்ணிகள் காணப்படுவது நமைச்சல் அரிப்பு படை ஏற்படுவது இரத்த குறைவு அல்லது இரத்த சோகை ஏற்படுவது (அனிமியா)

நோயின் காரணிகள்:

சுகாதாரமற்ற பசு கொட்டகை அழுக்கு மற்றும் குப்பைகளினால் ஒட்டுண்ணிகள் உருவாவது.

நோய்க்கான மருத்துவம் :

புங்க எண்ணெய் 100 கிராம், உப்பு 10 கிராம், கற்பூரம் 10 கிராம், புங்கஎண்ணெயில்100 கிராம் உணவு உப்பை போடவேண்டும். இதனுடன்10 கிராம் கற்பூரம் பொடி செய்து நன்றாக கலக்க வேண்டும். இந்த கலவையை உடலில் மேற்புறத்தில் தடவ வேண்டும். ஒரு நாளில் ஒரு முறை என மூன்று நாட்களுக்கு தடவினால் ஒட்டுண்ணிகள் கட்டுக்குள் வரும்

**அக ஒட்டுண்ணிகளால் பாதிப்பு**



கோழிகளின் உணவுப் பாதையில் வாழும் நாடா, உருண்டைப் புழுக்கள், ஒரணு வகை ஒட்டுண்ணி, கோழிகளுக்குச் சேர வேண்டிய ஊட்டச் சத்துக்கள் உறிஞ்சப்படுவதைக் தடுத்தும், இரத்தத்தை உறிஞ்சியும், குடற்பகுதியை அடைத்தும் பாதிப்பை உண்டுபண்ணுகின்றன. சில வகை நாடாப்புழுக்கள் குடலில் இரத்தக்கசிவையும், கட்டிகளையும் உண்டாக்கும். இவை குடலை அடைத்துக் கொள்வதால் கோழிகள் இறக்க நேரிடும். செரிமான வயிறு, கடுந்தசை, இரைப்பை, கண், மூச்சுக்குழாய் ஆகிய பகுதிகளில் உருண்டைப் புழுக்கள் காணப்படும். உருண்டைப் புழு (ஹெட்டிராகிஸ் கேலினேரம்) கோழிகளில் கருப்பு தலை எனும் நோய் உண்டாக்கும் இடைநிலை உயிரியாகச் செயல்படுகிறது. ஓரணு வகை ஒட்டுண்ணியால் இரத்தக்கழிச்சல் நோய் ஏற்படும்.

அக ஒட்டுண்ணிகளின் முட்டைகள் கோழிகளின் எச்சத்தில் காணப்படும். இவ்வாறு வரும் அக ஒட்டுண்ணிகளின் முட்டைத் தீவனத்திலோ அல்லது குடிநீரிலோ விழும் பொழுது இவற்றை உட்கொள்ளும் கோழிகள் ஒட்டுண்ணிப் பாதிப்பிற்கு ஆளாகின்றன.

**குடற்புழு நீக்கம்**

நாடாப்புழு, உருண்டைப் புழுவை நீக்கக் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி குடற்புழு நீக்க மருந்தை அளிக்க வேண்டும். மாறாக, பூசணி விதை மற்றும் மாதுளம் பழத்தோல், தண்டு வேர் ஆகியவற்றைத் தூளாக்கிக் கோழிகளுக்குக் கொடுப்பதன் மூலம் அக ஒட்டுண்ணிகளின் முட்டைகளையும், புழுக்களையும் அழிக்கலாம். அல்லது புகையிலை 50 கிராம் நறுக்கி ஒரு பாத்திரத்தில் உள்ள நீரில் 2 மணி நேரம் ஊற வைத்து வடித்த சாற்றினை 10 கோழிகளுக்கு தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம். இதை கொடுத்த பின் 2 மணி நேரம் கழித்து பேதி உப்பு (எப்சம் ஸால்ட்) கரைத்த தண்ணீரை கொடுக்கலாம். கொட்டைப் பாக்கு நான்கு, விரலி மஞ்சள் கிழங்கு 100 கிராம் அளவு எடுத்து தூள் செய்து நீரில் கலந்து 10 கோழிகளுக்குக் கொடுக்கலாம். இதனை மாதம்

ஒரு முறை தர வேண்டும்.அல்லது வெள்ளைப்பூண்டு 10 பல், தும்பை இலை 10 கிராம், கொட்டைபாக்கு 4 எண்ணம் அரைத்து நீரில் கலந்து 10 கோழிகளுக்குகுகொடுக்கலாம்.

## கால்நடை மூலிகை வைத்ய செயலியில் வரும் வைத்ய முறைகள்

(சென்ற இதழில் போடப்பட்ட செயலியின் தொடர்ச்சி)

**55. ரோமங்கள் உதிர்ந்து சொட்டையாக இருத்தல்:**

அறிகுறிகள்:

குடற்புழு நீக்கம் செய்யாவிடில் சொட்டை ஏற்படும். அம்மை, கோமாரி, சொரியாசிஸ் நோய்கள் உள்ள மாடுகளுக்கு சொட்டை விழும்.

வைத்திய முறை:

1) சோற்றுக் கற்றாழையுடன் மஞ்சள் சேர்த்து கலந்து தேவையான அளவு மேல் பூச்சாக பூசவும்.

2) பொடுதலை, கரிசலாங்கண்ணி, செம்பருத்தி கைப்பிடி அளவு சேர்த்து அரைத்துச் சாறு எடுத்து அரை லிட்டர் தேங்காய் எண்ணெயில் சேர்த்து 5 – 7 நாட்கள் வரை சூரிய ஒளியில் குறைந்தது 3 மணி நேரமாவது வைத்து பின்னர் இதனை பாட்டிலில் ஊற்றி வைத்து கொள்ள வேண்டும். இதை மேல் பூச்சாக பூசி வரவும்.

**56. இளங்கன்று கழிச்சல்**

அறிகுறிகள்:

இளங்கன்றுகளுக்கு ஏற்படும் நோய் இது. கன்றுகளுக்கு இடைவிடாது கழிச்சல் ஏற்படும். சாணம் பால் போலவும், துர்நாற்றத்தோடும் காணப்படும்.

தேவையான பொருட்கள்:

ஆவாரம் கொழுந்து இலை, மாமரக் கொழுந்து இலை, மாதுளை கொழுந்து இலை வகைக்கு 10 கிராம் வீதம், மஞ்சள் தூள் – 10 கிராம், சர்க்கரை – 10 கிராம், கடுக்காய்த்தூள் – 10 கிராம், உப்பு – 2 கிராம், திரிபலா சூரணம் – 15 கிராம், ஆவாரம்பூ தூள் – 5 கிராம், தென்னங்குரும்பை – 3.

சிகிச்சை முறை:

1) ஆவாரம் கொழுந்து (10 கிராம்), மாமரக் கொழுந்து இலை (10 கிராம்) மாதுளைக்கொழுந்து இலை (10 கிராம்), மஞ்சள் தூள் (5 கிராம்), சர்க்கரை(5கிராம்) இவை அனைத்தையும் எடுத்து, ஒன்றாக சேர்த்து அரைத்து, இரண்டு வேளை கொடுக்கவும்.

2) கடுக்காய்த்தூளுடன் (10 கிராம்), சர்க்கரை (5 கிராம்), உப்பு (2 கிராம்) கலந்து இரு வேளை உள்ளுக்குள் கொடுக்கவும்.

3) திரிபலா சூரணம் (15 கிராம்), ஆவாரம் பூத்தூள் (5 கிராம்) எடுத்து, இரண்டையும் கலந்து, இரண்டு வேளை கொடுக்கலாம்.

4) மூன்று தென்னங்குரும்பைகளை எடுத்து நன்கு அரைத்து, இதோடு மஞ்சள் தூள் (5 கிராம்)சேர்த்து கொடுக்கவும்.

பேய்மிரட்டி இலை கைப்பிடியளவு, நாயுருவி இலை சிறிது சுண்ணாம்பு வேப்பெண்ணெய் – 50 மில்லி.

சிகிச்சை முறை:

1) உரிக்கட்டி வேர் என்ற ஈஸ்வர மூலிகை வேர், அழிஞ்சில் மரப்பட்டை பீமரப்பட்டை மூன்றையும் சேர்த்து அரைத்து, ஒரு கப் ஆட்டுப்பாலில் கலந்து மாட்டிற்கு உள்ளே கொடுத்தல் வேண்டும்.

2) மணத்தக்காளி இலைகளை வேப்பெண்ணையில் வதக்கி கடிவாயில் வைத்து கட்ட வேண்டும்.

இத்துடன் பேய்மிரட்டி இலையை இடித்து இரண்டு கப் சுடுநீரில் கலக்கி உள்ள கொடுக்க வேண்டும். இதை 7 நாட்கள் தொடர்ந்து உள்ளே கொடுத்தல் வேண்டும்.

3) கைப்பிடி அளவு நாயுருவி இலைகளை எடுத்து நன்கு அரைத்து, இரண்டு கப் வெள்ளாட்டுப் பாலில் கலந்து தினசரி மாலை ஒரு வேளை வீதம் 7 நாட்களுக்கு இதே போல், இதே அளவில் உள்ளுக்கு கொடுத்து வர வேண்டும்.

4) கைப்பிடியளவு நாயுருவி இலைகளை எடுத்து அரைத்து சாறு எடுத்து, இச்சாறை சுண்ணாம்புடன் குழைத்து, நாய் கடித்த இடத்தில் பூசி வரவேண்டும்.

**57. காது நோய்**

அறிகுறிகள்

மாடுகளின் காதுகளில் இருந்து சீழ் வடியும். காதுகளில் அடிப்பக்கம் வீக்கம் காணப்படும். காதுகளில் கட்டி ஏற்படும்.

காரணம் : வேலமரம், புளியமரம் அருகில் மாடுகளை கட்டும்போது சூட்டால், வெக்கை ஏற்பட்டு இந்த அறிகுறிகள் காணப்படும்.

தேவையான பொருட்கள் :

மருள்–2 மடல், விளக்கெண்ணெய்– 250 மி.லி. மஞ்சள் தூள் – 10 கிராம், வேப்பெண்ணெய் – 100 மி.லி. வசம்பு – 10 கிராம், சிறிய வெங்காயம் – 10

கிராம், தும்பை இலை – 250 கிராம், தேங்காய் எண்ணெய் – 200 மி.லி. வெள்ளைப் பூண்டு – 8 பற்கள்.

சிகிச்சை முறை;

1)மருள்(2–மடல்) எடுத்து இதன் மேல் விளக்கெண்ணெய் தடவி, நெருப்பில் வாட்டி, பின்பு பிழிந்து சாறு எடுக்கவும். இந்தச்சாறை காதில் ஊற்றவும்.

2) 200 மி.லி. விளக்கெண்ணெயுடன், 5 – கிராம் மஞ்சள் தூள் கலந்து காதில் ஊற்றவும்.

3) 100 மி.லி. வேப்பெண்ணெயில், வசம்பு (10 கிராம்), சிறிய வெங்காயம் (10 கிராம்) சேர்த்து காய்ச்சவும். பின்பு இது ஆறிய பின்பு, 5 சொட்டு வீதம் காலை, மாலை மாடுகளின் காதில் ஊற்றவும்.

4)100 மி.லி. தேங்காய் எண்ணெயில், தும்பை இலைச்சாறு (50 மி.லி), மஞ்சள் தூள் (5 கிராம்), வெள்ளைப்பூண்டு – 4 பற்களைப் போட்டு காய்ச்சி ஆறியபின் காலை, மாலை இருவேளை காதில் ஊற்றவும்.

### 58. பால் குடிக்காத கன்றுக்கு

அறிகுறிகள்:

புதிதாகப்பிறந்த கன்று பால் குடிக்காது.

வைத்தியம்:

1) பருத்திக்கொட்டை ஊறவைத்து அரைத்து 50 மில்லி பால் எடுத்து கொடுக்க வேண்டும்.

2) வடிகஞ்சியில் (100 மில்லி) உப்பு அல்லது சர்க்கரை 10 கிராம் சேர்த்து கொடுக்க வேண்டும்.

3) வடித்த கஞ்சியுடன் (100 மில்லி) பசும்பால் 50 மில்லி கலந்து கொடுக்க வேண்டும்.

### 59. சாதாரண நாய்க்கடிக்கு

அறிகுறிகள்: காயம் மற்றும் புண் உண்டாகும்.

வைத்திய முறை:

வெளி மருந்து:

1) கடிபட்ட இடத்தில், சுடு தண்ணீரில் கல் உப்பை கரைத்து கழுவ வேண்டும்.

2) நாயுருவி இலை– 50 கிராம் அளவு எடுத்து, அரைத்து இதோடு சிறிதளவு சுண்ணாம்பு மற்றும் அரைக்கரண்டி சேர்த்து குழைத்து கடிபட்ட இடத்தில் பூசவும்.

உள் மருந்து: 1) மஞ்சள், சீரகம், மிளகு ஒவ்வொன்றும் வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்து, நன்கு அரைக்கவும், அரைத்த விழுதை கால் லிட்டர் தேங்காய் பாலில் கலந்து உள்ளே கொடுக்கவும்.

### 60. எலும்பு முறிவு மற்றும் கால் ஒடிதல்

அறிகுறிகள்:

கீழே விழுதல் மற்றும் விபத்து காரணமாகவும், மற்ற மாடுகளுடன் மோதுவதாலும் ஏற்படும்.

தேவையான பொருட்கள்:

புளியங்கொட்டை 200 கிராம், நாட்டுக்கோழி முட்டை 5, நல்லெண்ணெய் 200 மில்லி, பனைமட்டை, உளுந்து கால் கிலோ, பிரண்டை – 20 கிராம், பால் – 250 மில்லி, அமுக்கராங்கிழங்கு – 20 கிராம்.

வைத்திய முறை:

1) புளியங்கொட்டையை (200 கிராம்) ஊற வைக்கவும், ஊறிய பின் நன்கு அரைக்கவும், இதனுடன் இரண்டு நாட்டு கோழி முட்டையில் வெள்ளைக்கருவை சேர்த்து, பாதிக்கப்பட்ட இடத்தில் பூசவும்.

2) பின்பு இதற்கு மேல் பனை மட்டையை சிறியதாக சீவி ஒடிந்த காலை சுற்றி வைத்து, பனை மட்டையை காலோடு சேர்த்து, பருத்தித்துணியால் சுற்றி கட்ட வேண்டும்.

3)இப்படி கட்டிய பின், மேல் பகுதியில் நல்லெண்ணையை (100 மில்லி) சிறிது சிறிதாக ஊற்ற வேண்டும். பிறகு இது போல் பூசி, பனை மட்டையால் கட்டி, நல்லெண்ணெய் ஊற்றி வர வேண்டும்.

4) உளுந்து (கால் கிலோ) ஊறவைத்து அரைத்து, இதோடு மூன்று நாட்டுக்கோழி முட்டையின் வெள்ளைக்கருவை கலந்து பாதிக்கப்பட்ட கால் பகுதிகளில் பூசிய பின், குச்சி வைத்து, பருத்தித்துணியால் சுற்றிக்கட்ட வேண்டும்.

உள் மருந்து:

5) பிரண்டை, அமுக்கராங்கிழங்கு (தலா 20 – கிராம்) வீதம் எடுத்து அரைத்து. இதை கால் லிட்டர் பாலில் கலந்து மாடுகளுக்கு உள்ளே கொடுக்கவும்.

### 61. மூக்கடைப்பான்

அறிகுறிகள்:

மாடுகளால் மூச்சு விட முடியாது. மூக்கில் இருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். இதோடு ரத்தம் கலந்தும் வரலாம். மூக்கு அடைத்திருப்பதன் காரணமாக மாடுகளுக்கு குறட்டை சத்தம் ஏற்படும்.

மூக்கினுள்ளே புண்கள் காணப்படுவது மட்டுமின்றி புழுக்கள் உருவாகியிருக்கும்.

காரணம்: குளிர்காலம் காரணமாகவும், கிருமிகளாலும் மூக்கடைப்பான் ஏற்படும்.

தேவையான பொருட்கள்:

கண்டங்கத்திரி பழம் 15, வெள்ளாட்டு கோமியம் – கால் லிட்டர், பட்ட மிளகாய் 2, கைப்பிடி குப்பைமேனி இலை, சிறிய வெங்காயம் 3, மிளகு 5.

வைத்திய முறை:

வெளி மருந்து:

1. கண்டங்கத்தரி பழங்களை (10) நன்கு நறுக்கி 250 மில்லி வெள்ளாட்டு கோமியத்தில் போட்டு ஓர் இரவு முழுவதும் ஊற விடவும். பின்பு காலையில் இதை வடிகட்டி மாடுகளின் மூக்கில் (இரண்டு மூக்குகளிலும்) நான்கு சொட்டு வீதம், காலை, மாலை விடவும்.

உள் மருந்து:

2. கண்டங்கத்திரி பழம்(5), பட்ட மிளகாய்(2) இவற்றை சேர்த்து அரைத்து, சுண்ணாம்பு(5 கிராம்) சேர்த்து 500 மில்லி நீரிலிட்டு கொதிக்க வைத்து ஆறிய பின்பு 250 மில்லி வீதம் ஒருநாள் இரண்டு முறை கொடுக்கவும். இப்படி மூன்று நாட்கள் உள்ளே கொடுத்து வரவும்.

3. குப்பைமேனி இலை (1 கைப்பிடி), மிளகு(5), சிறிய வெங்காயம்(3) இவற்றை சேர்த்து அரைத்து இதை ஒரு கப் வெதுவெதுப்பான நீரில் கலந்து, சொட்டு வீதம் இரண்டு மூக்குகளிலும் மூன்று முறை விடவும். சரியாகவில்லை எனில் மேலும் ஒரு நாள் இம்முறையைப் பின்பற்றவும்.

## 62. தாடை வீக்கம்

அறிகுறிகள்:

மாடுகளின் தாடை வீங்கி காணப்படும். அசை போட முடியாது. தீனி எதுவும் எடுக்காது. காய்ச்சல் அதிகமாக இருக்கும்.

தேவையானப் பொருட்கள்:

திரிகடுகு சூரணம் – 30 கிராம், நிலவேம்பு – 200 கிராம், பட்ட மிளகாய் – 3, கண்டங்கத்திரி பழம் – 3, கல் உப்பு – ஐந்து கிராம், குப்பைமேனி, தும்பை, மிளகு சீரகம், ஆடாதொடை, சிறிய வெங்காயம் இவை ஆறும் வகைக்கு 10 கிராம், தேங்காய் பால் கால் லிட்டர்.

வைத்திய முறை: 1) திரிகடுகு சூரணம் (30 கிராம்), நிலவேம்பு (200 கிராம்), பட்ட மிளகாய் – 3, கண்டங்கத்திரி பழம் –3, கல் உப்பு – 5 கிராம் இவைகளை அரை லிட்டர் நீர்
சேர்த்து காய்ச்சி, ஆறியபின் இருவேளை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கவும்.

2) குப்பைமேனி, தும்பை, மிளகு, சீரகம், ஆடாதொடை, சிறிய வெங்காயம் (வகைக்கு 10 கிராம்) அனைத்தையும் சேர்த்து அரைத்து, தேங்காய்ப் பாலில் (கால் லிட்டர்) கலந்து ஒரே முறையாகக் கொடுக்கவும்.

## 63. கண்களில் நீர் வடிதல்

அறிகுறிகள்:

மாடுகளின் கண்கள் வீங்கி இருக்கும். மட்டுமின்றி சிவந்து காணப்படும், கண்களில் இருந்து நீர் மற்றும் பீளை வடியும். கண்களில் வெள்ளை விழும். பார்வை மங்கும்.

தேவையான பொருட்கள்:

கோவை இலை, ஆமணக்கு இலை இரண்டு வகை கைப்பிடியளவு, கல் உப்பு –10 கிராம், நந்தியாவட்டை பூ –10, தும்பை பூ 10, கிராம்பு – 5.

வைத்திய முறை:

1) கோவை இலை, ஆமணக்கு இலை (கைப்பிடி வீதம்) எடுத்து, இதோடு கல் உப்பு (10 கிராம்) சேர்த்தரைத்து சாறு பிழிந்து கண்களில் ஒரு முறை 4 – சொட்டுகள் வீதம், ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் மூன்று நாட்கள் விடவும்.

2) நந்தியாவட்டை பூ (10), தும்பை பூ(10), கிராம்பு(5) மூன்றையும் சேர்த்தரைத்து சாறு பிழிந்து கண்களில் நான்கு சொட்டு வீதம் ஒருவேளைக்கு ஒரு முறை வீதம் மூன்று நாட்கள் விடவும்.

## 64. நாவரணை

அறிகுறிகள்:

மாடுகளின் நாக்கு தடித்தும், சொரசொரப்பாகவும் காணப்படும். மாடுகள் தீவனம் எதுவும் உண்ணாது. மெலிந்து விடும்.

வைத்திய முறை:

1) நாக்கில் தோல் உரிக்கலாம். மேலும் பச்சை நரம்பை குத்தி விடலாம்.

2) ஐந்து கிராம் வீதம் கல் உப்பு, புளி, பிரண்டை எடுத்து, சேர்த்தரைத்து நாக்கில் நன்றாகத் தேய்த்து விடவும்

3) பின்பு மசால் உருண்டை கொடுக்கவும்.

4) நெய் அல்லது வெண்ணெயை மாட்டின் நாக்கில் தடவவும்.

**65. கருப்பை நோய்கள்**

அறிகுறிகள்: மாடுகள் சோர்வாக காணப்படும். இரை எடுக்காது. முதுகு கூன் வளைந்து இருக்கும். சாணம் துர்நாற்றம் வீசும். பின்புறத்தில் இருந்து சீழ் வடியும். முடையில் வெள்ளை கலந்து வரும். வாயின் அடிப்பாவத்தை எப்போதும் தூக்கிக் கொண்டு வைத்திருக்கும். பலமுறை கருவூட்டம் செய்தாலும் சினை தங்குவதில்லை.

**66. இளைப்பு நோய்** (இரைப்பு நோய்)

அறிகுறிகள்:

மாடுகளால் மூச்சு விட முடியாது, இரைப்பு (திணறல்) ஏற்படும். வெயிலில் சிறிது நேரம் கூட நிற்க முடியாது. அதிக பால் கொடுக்கும் மாட்டிற்கு இது ஏற்படும். கடலைப்புண்ணாக்கு அதிகம் கொடுப்பதாலும் இளைப்பு ஏற்படும்.

தேவையானப் பொருட்கள்:

சுருட்டுப் புகையிலை, ஊமத்தை இலை வகைக்கு கால் கிலோ, ஆடாதொடை இலை – 10, மிளகு – 10, கற்பூர வில்லை – 2.

வைத்திய முறை: 1)சுருட்டுப் புகையிலை, ஊமத்தை இலை இரண்டையும் தணலில் இட்டு புகை போடவும்.

2) ஆடாதொடை இலை (10), மிளகு (10), கற்பூரவள்ளி இலை மூன்றையும் அரை லிட்டர் தண்ணீரிலிட்டு வேக வைக்கவும். பின்பு இந்த தண்ணீரை 250 மில்லி (கால் லிட்டர்) வீதம் ஒரு நாளைக்கு இருவேளை கொடுக்கவும். மாடு வெளியில் மேயும். மாடு வெயிலில் மேயும் போது, வெயில் தாக்காதவாறு, மாடுகளின் மேல் துணியை போர்த்தி விடவும்.

தேவையான பொருட்கள்:

இலந்தை இலை – 100 கிராம், மிளகு – 10 கிராம், பூண்டு – 50 கிராம், வேப்பம்பட்டை, ஒதியம் பட்டை, தென்னங்குரும்பை, மாவிலங்கபட்டை நான்கும் வகைக்கு 100 கிராம், சீரகம் – 50 கிராம்.

வைத்திய முறை:

1) இலந்தை இலை (100 கிராம்), மிளகு (10 கிராம்), பூண்டு (50 கிராம்) மூன்றையும் அரைத்து உள்ளே கொடுக்கவும்.

2) வேப்பம்பட்டை, ஒதியம் பட்டை, தென்னங்குரும்பை, மாவிலங்கப் பட்டை (வகைக்கு 100 கிராம்), இதோடு சீரகம் (50 கிராம்) சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீரில் இட்டு, பாதியாக சுண்டும் வரை காய்ச்சவும் பின்பு இதை ஆறிய பின், ஒரு நாள் இருவேளை (250 மில்லி வீதம்), ஐந்து நாட்களுக்கு கொடுத்து வரவும்.

**67. அதிகமான மருந்து கொடுத்ததால் ஏற்படும் இறப்பை தடுக்க**

அறிகுறிகள்: மாடுகளின் வயிறு ஊதி காணப்படும். இரை எடுக்காது. நான்கு கால்களையும் விரித்து படுத்திருக்கும்.

தேவையானப் பொருட்கள்:

1) புளி, வெல்லம் (வகைக்கு 250 கிராம்), வாழைப்பழம் (4) இவை அனைத்தையும் 3 லிட்டர் தண்ணீரில் கரைத்து மாடுகளுக்கு கொடுக்கவும்.

2) சிறியாநங்கை, அவுரி, முருங்கை இலை – இவற்றை கைப்பிடி வீதம் எடுத்து இதோடு மிளகு (10–கிராம்) சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீரில் இட்டு வேகவைத்து, கால் லிட்டர் வீதம் இருவேளை, மூன்று நாட்கள் கொடுக்கவும்.

3) பஞ்சகவ்யா 200 மில்லி அளவு காலை, மாலை தொடர்ந்து மூன்று நாட்கள் கொடுத்து வரலாம்.

**68. முன் கழுத்து கழலை / கட்டி**

அறிகுறிகள்: கழுத்துப் பகுதியில் கட்டிகள், கழலைகள் ஏற்படும், வலியாக இருக்கும் .

காரணம்:

அதிக பாரம் இருப்பதால் ஏற்படும். நுகத்தடி அழுத்தம் காரணமாக, பூச்சி மற்றும் வண்டுகள் கடிப்பதால் கட்டிகள் ஏற்படும்.

தேவையான பொருட்கள்: சுண்ணாம்பு – 100 கிராம், இஞ்சிச்சாறு – அரை கப், மயில் துத்தம் – 50 கிராம், நாயுருவி இலை, தும்பை இலை இரண்டும் வகைக்கு 10 கிராம், கரித்தூள்.

வைத்திய முறை:

1) சுண்ணாம்புடன், இஞ்சிச்சாறு சேர்த்து குழைத்து கட்டிகள் மேல் பூசவும்.

2) நாயுருவி இலை, தும்பை இலை (100 கிராம் வீதம்) இரண்டையும் சேர்த்து அரைத்து இதோடு சுண்ணாம்பு (50 கிராம்) கலந்து குழைத்து கட்டி மேல் பற்று போடவும்.

3) அதிக பாரம் இழுத்ததால் ஏற்பட்ட கழலை மேல், வெதுவெதுப்பான தண்ணீரால் ஒத்தடம் கொடுக்கவும்.

4) கைப்பிடி அளவு தும்பை இலைகளை எடுத்து அரைத்து இதோடு இரண்டு கரண்டி கரித்தூள் சேர்த்து வெள்ளைத்துணியில் சீராகப் பரப்பி, கழலை மேல் ஒட்டி விடவும். சரியாகும் வரை தண்ணீர் படக்கூடாது.

### 69. மாடு கனைத்தல் அல்லது செருமல்

அறிகுறிகள்:

மாடு செருமிக் கொண்டும் கனைத்துக் கொண்டும் இருக்கும். தொண்டை வீக்கமாக இருக்கும்.

வைத்திய முறை:

1) ஆடாதொடை 10 கிராம், துளசி 10 கிராம், இஞ்சி 10 கிராம் சேர்த்து அரை லிட்டர் நீரில் போட்டு காய்ச்சி ஆற வைத்து இதோடு சர்க்கரை 20 கிராம், கலந்து இரண்டு வேளை விதம் 3 முதல் 5 நாட்கள் வரை கொடுக்கவும்.

2) திரிகடுகு சூரணம் 30 கிராம், சர்க்கரை 10 கிராம் இரண்டையும் கலந்து ஒரு நாளைக்கு ஒருவேளை விதம் 3 நாட்கள் கொடுக்கவும்.

### 70. கொம்பு ஒடிதல்

அறிகுறிகள் : விபத்துக்கள் ஏற்படுதல், மாடுகள் முட்டிக் கொள்வதால், கொம்பு முறிதல், மண்டைக் கரைப்பான் போன்ற காரணங்களால் கொம்பு முறிவு ஏற்படும்.

வைத்திய முறை : 1) கூரைப்புகை (ஒட்டடை) சீனி சேர்த்து கொம்பு ஒடிந்த இடத்தில் தடவவும்.

2) வெட்டுக்காயப்பூண்டு (100 கிராம்), மஞ்சள் தூள் (10 கிராம்) எடுத்து இரண்டையும் சேர்த்து அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து பத்து போடவும்.

3) ஆலம்பால் அல்லது திருகுகள்ளிப்பாலில் காட்டன் துணியை நனைத்து ஒடிந்த கொம்பு பகுதியில் சுற்றி விடவும்.

4) மத்தான் தைலத்தை கொம்பு ஒடிந்த இடத்தில் தடவவும்.

குறிப்பு : ஒரு வாரம் மழையில், தண்ணீரில் மாடுகளை நனைய விடக்கூடாது.

அறிகுறிகள் :

நான்கு கால்களும் நடுங்கும்; உடல் புல்லரிக்கும்; ரோமம் குத்திட்டு மேல் நோக்கி இருத்தல், வாய், கண்களில் இருந்து நீர் வடியும்; சிறுநீர் சிவப்பு மஞ்சள் நிறத்தில் இருக்கும்; தீவனம் தின்னாது; சாணம் போடாது. பால் உற்பத்தியில் குறைவு ஏற்படுதல் உண்டாகும்.

காரணம் : தொற்று கிருமிகளால் ஏற்படும் நோயாகும். குந்து நோய் வரும்போது ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டிற்கு எளிதில் பரவி விடும்.

### 71. மூட்டு வீக்கம்

நோய் அறிகுறி: கால்நடையால் எழுந்திருக்க முடியாது. நிற்க முடியாது. முழங்கால், மூட்டுப்பகுதி வலி மற்றும் மிருதுவாகும் தன்மை.

நோய்க்காரணம்:

மூட்டுப் பகுதியில் நீர் கோர்த்தால் மற்றும் முழங்கால், மூட்டுப்பகுதியில் ஏற்பட்ட வீக்கம்.

தேவையான பொருட்கள்; சோற்றுக் கற்றாழை மடல் – 100 கிராம், சுண்ணாம்பு – 10 கிராம் (கால்சியம் ஹைட்ராக்சைடு), பிரண்டைக் கொடி (தண்டுப் பகுதி) – 100 கிராம், மஞ்சள் தூள் – 15 கிராம், பூண்டு – 5 பற்கள், நல்லெண்ணெய் – ஒரு லிட்டர்.

மருந்து தயாரிப்பில்: குறிப்பிடப்பட்ட அனைத்துப் பொருட்களையும் ஒன்றாக சேர்த்து கூழ் போல அரைத்துக் கொள்ளவும். அரைத்த பின் இவற்றை ஒரு லிட்டர் நல்லெண்ணெயில் சேர்த்து இந்த கலவையை அடுப்பிலேற்றி சூடாக்கவும். கொதித்த பின்பு இறக்கி ஆற வைக்கவும்.

சிகிச்சை முறை:

இந்தக் கலவையை, பாதிப்பு ஏற்பட்ட மூட்டு மற்றும் முழங்கால் பகுதியில் அழுத்தமின்றி மெதுவாகப் பூசவும். பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் ஒரு நாள் இரண்டு முறை சுடுநீரால் ஒத்தடம் கொடுக்கவும்.

### 72. அம்மை / மருகு / வெடிப்பு

நோய் அறிகுறி: மாட்டின் உடல் முழுவதும் கொப்பளங்கள் காணப்படும். காய்ச்சல் இருக்கும். முகம் மற்றும் பால்மடிப் பகுதிகளில் கொப்பளங்கள் அதிகமாகக் காணப்படும்.

தேவையான பொருட்கள்: பூண்டு – ஐந்து பல், மஞ்சள் பொடி – 10 கிராம், சீரகம் – 15 கிராம், திருநீற்றுப்பச்சிலை கைப்பிடியளவு, வேப்பிலை கைப்பிடியளவு, வெண்ணெய் அல்லது நெய் – 50 கிராம்.

மருந்து தயாரிப்பு:

சீரகத்தை மட்டும் சுமார் 15 நிமிடங்கள் நீரில் ஊறவைத்த பின் இதோடு பூண்டு, மஞ்சள், திருநீற்றுப்பச்சிலை, வேப்பிலை நன்கு அரைக்கவும்

அரைத்த பின் வெண்ணெய் அல்லது நெய் சேர்த்து கலக்க வேண்டும்.

சிகிச்சை முறை: முதலில் பாதிக்கப்பட்ட மேற்பகுதியை நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின் உலர்ந்த பிறகு..... பாதிக்கப்பட்ட பகுதி மேல் அதாவது மாடுகளின் மேல் காணப்படும் கொப்பளங்கள் மேல் நன்கு பூசவும்.

## வாசகர் வட்டம்

கேள்வி : எனக்கு மரத்தில் பல் வைத்து நெல்லிலிருந்து உமியை மட்டும் பிரிக்கும் இயந்திரம் தேவைப்படுகிறது இதனை எங்கிருந்து தருவிக்கலாம்.

பதில்: ஸ்ரீ வில்லிபுத்தூர் அருகேயுள்ள மல்லியில் திரு. பிச்சை முருகன் இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவரை தொடர்பு கொண்டு அணுகுங்கள்.

டி.எஸ். வெங்கடாசலம்
திருவெண்ணெய்நல்லூர். செல் : 8523910414

பிச்சைமுருகன் முகவரி:
1/186, தெற்கு தெரு அச்சன்குளம் அஞ்சல்
ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா
விருதுநகர் மாவட்டம் –626141
செல் : 9362794206

## முகுந்தனின் வேளாண்மை உத்திகள்

நான் பல வருடங்களாக இயற்கை வேளாண்மை கடைபிடித்து வருகிறேன். கரும்பு விவசாயம் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைப்பது இல்லை. கரும்புக்கு டன் ரூ. 4000 கிடைத்தாலும் லாபம் இல்லை. ஏனென்றால் வெட்டு கூலி மற்றும் ஆலைக்கு கொண்டு போகும் போக்குவரத்து செலவு ரூ. 2000 வரை வந்து விடும். மீதி ரூ. 2000 அதாவது ஒரு கிலோவுக்கு ரூ. 2 மட்டும் கிடைக்கும். கரும்பை நறுக்கி பால் மாடுகளுக்கு 20 கிலோ வரை கொடுத்தால் 2 லிட்டர் பால் கூடும். இதற்கு போக்குவரத்து நிலையம், இரயில் நிலையம் அருகில் கரும்பை சுத்தம் செய்பவர்களுக்கு இடம் கிடைத்தால் மாடு வளர்ப்போருக்கு கிலோ ரூ. 5 க்கு கொடுக்கலாம். ஒரு நாளைக்கு 200 கிலோ விநியோகித்தால் விவசாயிக்கு ரூ. 1000 கிடைக்கும். மாதத்தில் 10 விவசாயிகள் சேர்ந்தால் சுழற்சி முறையில் லாபம் எடுக்கலாம். கரும்புச்சாற்றை நன்றாகக் காய்ச்சி 90 சதவீதம் நீரைக்குறைத்து சர்க்கரைப்பாகு தயார் செய்தால் நல்ல ருசி கிடைக்கும். இவ்வாறு மதிப்பு கூட்டி விற்பனை செய்தால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்க வழி உண்டு.

முகுந்தன், 92, இராஜாஜி தெரு,
செங்கல்பட்டு
செல் : 8883727588

## சாண எரி வாயு உரம்

சாண எரிவாயு தயார் செய்யும் சமயம் கிடைக்கும் திரவக்கழிவு சத்தான உரமாகும். இது மண்புழு உரம், ஜீவாமிருதம் தயாரிப்பதை காட்டிலும் சிக்கனமான உரமாகும். ஓர் ஏக்கருக்கு குப்பை 5 டன் போடுவதை விட ஒரு டன் மக்கிய சாண எரிவாயு உரத்தை இடுவது சிறப்பு. காய்கறி பயிர்களுக்கு மேலுரமாக 100 கிலோ இடலாம். இதனை ஒரு கிலோ ரூ. 10 க்கு கொடுத்து வருகிறேன். எங்களிடம் உள்ள நாட்டு மாட்டு கோசாலையிலிருந்து கிடைக்கும் பொருட்களிலிருந்து பஞ்சகவ்யா, ஜீவாமிருதம், பத்தி போன்றவற்றை கொடுத்துவருகின்றோம்.

நடராஜன், கோசாலா, தேவாந்தகுப்பம்
திருவள்ளூர் மாவட்டம். செல் : 9363111799

## கோமாரி நோய்க்கு

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம். அடையாசெட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய கால்நடைகள் அனைத்தும் கோமாரி நோயால் அவதிப்பட்டன. ஆங்கில வழி மருந்து வாரத்திற்கு மூன்று முறை பயன்படுத்தியும் எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. வந்தவாசி ரஞ்சித் கொடுத்த மூலிகை உருண்டையை ரூ. 20 கொடுத்து



வாங்கி பயன்படுத்தினேன். நோயின் தாக்கம் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. மாடு தண்ணீர் மற்றும் தீனி எடுக்காமல் இருந்தது. குடல்புழுநீக்கம் மருந்து கொடுத்தவுடன் மாடுகள் நன்றாக தண்ணீர் மற்றும் தீனி எடுக்க ஆரம்பித்தன. ஆங்கில மருத்துவத்திற்காக பணத்தை செலவழிக்கத் தயாராக இருக்கும் மக்கள் மூலிகை மருத்துவத்தை கடைப்பிடிப்பதில் அச்சப்படுகின்றார்கள். ஆங்கில மருந்தை உட்கொண்ட மாட்டில் பால் கறக்கும் திறன், பாலின் அளவு குறைந்துவிட்டது. மூலிகை மருந்தினை பயன்படுத்திய பின்பு பால் கறக்கும் திறனும், பாலின் அளவும் குறையவில்லை. அதே சமயத்தில் நோயும் குணமடைந்து விடுகின்றது. மாட்டிற்கு எதிர்ப்பு சக்தியும் கூடுகின்றது. என்னிடம் 13 மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இருந்தன. ஒரு மாட்டிற்கு ரூ. 20 என செலவு செய்து 13 மசால் உருண்டைகளை வாங்கி அனைத்து மாடுகளுக்கும் கொடுத்தேன். அனைத்து மாடுகளும் குணமாயின. நோய்எதிர்ப்பு சக்தியும் உயர்ந்தது. ஆங்கில வழி மருத்துவத்தை கடைப்பிடித்து இருந்தால் ஒரு மாட்டிற்கு ரூ. 1000 என குறைந்தது ரூ.13,000 செலவழித்திருக்கும். மூலிகை மருத்துவத்தை கற்றுக் கொண்டால் நாங்கள் கண்டிப்பாக கால்நடை மூலிகை வைத்யத்தை கடைப்பிடிப்போம் .

கே. பூபாலன், கருமாரியம்மன் கோவில் தெரு,
அடையாலச்சேரி கிராமம், நெர்குணாபட்டு அஞ்சல்
செங்கல்பட்டு மாவட்டம்–603305.
செல் : 9952573390

## ஆடுகளுக்கு வைத்ய முறை

### 1. மூலிகை மசால் உருண்டை தயாரிக்கும் முறைகள்

ஆடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை 1 மாத கால இடைவெளியில் கொடுப்பதால் கால்நடைகளுக்கு உண்டாகும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளான தீவனம் எடுக்காமல் இருத்தல், தண்ணீர் குடிக்காமல் இருத்தல், அசை போடாமல் இருத்தல், வயிறு உப்பிசம், மெலிந்து இருத்தல் போன்றவற்றிற்கும் மற்றும் நோய் வரும் முன் தவிர்ப்பு நடவடிக்கைக்கும் இது உதவும். இதனை தயாரிக்க தேவையான மூலிகை மற்றும் கடைச்சரக்கு பொருட்கள் (5 மாடுகள் அல்லது 12 ஆடுகளுக்கு தேவையானது) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

மிளகு – 10 கிராம், சீரகம் – 10 கிராம், கொத்தமல்லி விதை – 20 கிராம், வெந்தயம் – 10 கிராம், ஓமம் – 10 கிராம், சுக்கு – 50 கிராம், கொம்பு மஞ்சள் – 50 கிராம், சோற்றுக்கற்றாழை – 100 கிராம், சீந்தில் என்ற அமிர்தவள்ளி – 100 கிராம், (இலை, தண்டு) வெள்ளைப்பூண்டு– 50 கிராம், மிளகாய் வத்தல்– 50 கிராம், வெற்றிலை (இலை எண்ணிக்கை) – 10, கறிவேப்பிலை – 100 கிராம், துளசி இலை – 50 கிராம், ஆவாரம் (இலை மற்றும் பூக்கள்) – 100 கிராம், வேப்பிலை – 100 கிராம், கொய்யாகொழுந்து – 100 கிராம், தேங்காய் துருவல் – 100 கிராம், வெல்லம் – 100 கிராம், கல் உப்பு – 50 கிராம் சமையல் சோடா (ஆப்பசோடா) – 100 கிராம்

**மூலிகை மசால் உருண்டை தயாரிக்கும் முறை :**

முதலில் கடைசரக்குப் பொருட்களான மிளகு, சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், ஓமம், சுக்கு, கொம்பு மஞ்சள், மிளகாய் வத்தல் ஆகியவற்றை இடித்து ஒரு மிக்ஸியில் இட்டு தூள் செய்ய வேண்டும்.

புதிதாக கொண்டு வந்த தாவரப் பொருட்களான சோற்றுக்கற்றாழை, கறிவேப்பிலை, வேப்பிலை, கொய்யாக் கொழுந்து, தேங்காய், துளசி, வெள்ளைப் பூண்டு, சீந்தில், ஆவாரை ஆகியவற்றை இடித்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் தயாரிக்கப்பட்ட கடைச்சரக்கு தூளையும், இரண்டாவதாக இடித்து அரைத்து எடுத்துக் கொண்ட மூலிகை கலவையையும் சேர்க்க வேண்டும். இத்துடன் தூள் செய்யப்பட்ட வெல்லம், கல் உப்பு மற்றும் ஆப்ப சோடாவையும் நன்றாக கலந்து உருண்டை பிடித்து (எலுமிச்சை பழம் அளவு சுமார் 50 கிராம்) மஞ்சள் தூளில் உருட்டி எடுக்க வேண்டும்.

மூலிகை மசால் மருந்து உருண்டையை ஆடுகளுக்கு வழங்கும் அளவும் முறையும் :

வளர்ந்த ஆடுகளுக்கு ஓர் உருண்டை வாய் வழியே உள்ளே புகட்ட வேண்டும்.

செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையினை பாதி அளவாக 25 கிராம் அல்லது ஒவ்வொரு கன்று அல்லது குட்டியின் எடைக்கு ஏற்ப அளவைக் குறைத்து கொடுக்க வேண்டும்.

மூலிகை மசால் உருண்டையை தேவைக்குத் தகுந்தபடி மாதம் ஒரு முறை வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும்.

உபாதைகள் உள்ள ஆடு மாடுகளுக்கு மூலிகை மசால் உருண்டையை தொடர்ந்து 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு வேளை கொடுக்கலாம்.

மூலிகை மசால் உருண்டைகளை கொடுப்பதால் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கும் தீர்வாக அமையும். சினை பிடிக்காமை, இனப்பெருக்க பிரச்சணை, குடற்புழுக்கள் பிரச்சணை. ஆடுகளுக்கு நோய் வரும்முன் காப்பாக கீழ்க்கண்ட நோய்களுக்கும் இந்த மூலிகை மசால் கலவை மருந்து பயன்படுத்தி நோய் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

கோமாரி நோய் (கால்காணை, வாய்காணை), நீல நாக்கு நோய், நுண்கிருமிகளால் வரும் காய்ச்சல், மடிநோய், தொண்டை அடைப்பான்

–மூக்கன், மேல உரப்பனூர் – மதுரை

## 2. வாயு அதிகரிப்பால் ஏற்படும் வயிறு உப்பிசம்

அறிகுறிகள்:

முன்பக்கம் உள்ள நுரையீரல் பகுதியில் வயிறு உப்பி அழுத்தம் அதிகமாக இருப்பதால் ஆடு, மூச்சுவிட முடியாமல் பாதிக்கப்படும். வலி அதிகம் ஏற்படும் போது பல்லை நற நற என்று கடிக்கும்.

நோய் காரணங்கள் :

தீவனத்தை திடீரென்று மாற்றம் செய்து கொடுப்பது மீதமான சமைத்த உணவுகள் அரிசி சோறு, பொங்கல், கெட்டு போன உணவு முதலியவைகளை கொடுப்பது புரதசத்து தீவன செடிகளான முயல் மசால், வேலி மசால், அகத்தி, முருங்கை இலை, சுபாபுல், கிளிரிசிடியா ஆகியவைகளை அளவுக்கு அதிகமாக வழங்குவது அல்லது அடர் தீவனத்தை அதிகமாக கொடுப்பது

வைத்தியம்:

விளக்கெண்ணைய் 200 மி.லியுடன் தேவையான வெதுவெதுப்பான குடி தண்ணீர் சேர்த்து நன்றாக குலுக்கி இந்த திரவக் கலவையினை 4 – 6 மணி நேரம் வரை இடைவெளிவிட்டு இருமுறை பாதிக்கப்பட்ட பெரிய ஆடுகளுக்கு வாய் வழியே புகட்ட வேண்டும்.

வெற்றிலை 10 எண்ணிக்கை இலையுடன் இஞ்சி 20 கிராம், மிளகு 10 கிராம், வெள்ளைப்பூண்டு 10 கிராம், கல் உப்பு 50 கிராம் ஆகியவை சேர்த்து நன்றாக இடிக்கவும். மேற்கண்ட இடித்த கலவையுடன் வெது வெதுப்பான குடி நீரில் கலந்து 6 மணி நேரம் இடைவெளியில் வாய் வழியே ஆடுகளுக்கு கொடுக்க வேண்டும். மேற்கண்ட இடித்த கலவையின் அளவை சிறிய செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளின் வயிறு மற்றும் உடல் எடைக்கு தகுந்த படி குறைவான அளவு கொடுக்கவும்.

## 3. கழிச்சல்

அறிகுறிகள் : சாணம் தண்ணீராக வெளியேறும்

நோய் காரணங்கள் : செரியாத்தன்மை; கெட்டுப்போன தீவனம் உண்பது; விஷச் செடிகள் உட்கொண்டதால்.

வைத்தியம் :

வேப்பங்கொழுந்து, கொய்யாகொழுந்து, ஆவாரம் ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து சீரகம் 10 கிராம், வெல்லம் 100 கிராம் சேர்த்து அரைத்து 3 உருண்டையாக பிரித்து ஒரு வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 3 வேளை கழிச்சல் நிற்கும் வரை வாய்வழியே உள்ளே கொடுக்க வேண்டும்.

## 4. குடற்புழுக்கள்

அறிகுறிகள் :

ஆடுகள் மெலிந்து இளைத்து காணப்படும், உடலின் மேல் உள்ள ரோமம் பெரியதாக, இருக்கும், துர்நாற்றத்துடன் கூடிய சாணம் வெளியேறும், சாணத்தில் ஒரு சில புழுக்கள் உயிருடன் காணப்படும்.

காரணங்கள் :

ஆடுகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படுத்தும் நாக்குப் பூச்சி, உருண்டைப் புழு, நாடாப் புழு, கொக்கிப்புழு, ஈரல் பாதிக்கும் தட்டைப் புழுக்களால் உண்டாகிறது.

வைத்தியம்:

தேவையான மூலிகை பொருட்கள்: நொச்சி இலை 1 கிலோ, சோற்றுக்கற்றாழை மடல்கள் 1 கிலோ, வேப்பங்கொட்டை விதை 1 கிலோ, சங்கங்குப்பி இலை கிலோ, எருக்கு இலை 1 கிலோமேலே கூறிய அனைத்து மூலிகைகளையும் தண்ணீர் சிறிது தெளித்து தனித்தனியே அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இவைகளை ஒன்று சேர்த்த மூலிகைக் கலவையை நன்கு வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த கரைசலை ஒரு செம்மறி ஆடு அல்லது வெள்ளாட்டிற்கு ஒரு முறை குடற்புழுக்கள் நீக்கம் செய்ய 50 மி.லி அளவு வாய் மூலம் புரையேராதபடி கொடுக்கவும். 3 மாதம் வயதுக்கும் குறைவான செம்மறி அல்லது வெள்ளாட்டுக் குட்டிகளுக்கு 20 மி.லி மட்டுமே வாய் மூலம் வழங்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட குடற்புழு நீக்க திரவ மருந்தை ஒரு மாதம் வரை சேமித்து வைத்து பயன்படுத்தலாம். இந்த குடற்புழு நீக்க மருந்து வழங்கப்படும் போது சாணம் திரவமாக போடுவது மாறி கட்டியாக சாணம் வெளியேறும்; துர்நாற்றமும் மாறி நல்ல முறையில் சாணம் வெளியேறும். மேலும் ஆடுகள் நன்றாக மேய்ச்சல் எடுக்கும் திறன் அதிகரிக்க உதவும். மேய்ச்சல் அதிகமாக எடுப்பதாலும், சாணம் கெட்டியாக மாறுவதாலும் ஆடுகள் மீண்டும் சுறுசுறுப்பான ஆரோக்கியமான நிலைக்கு திரும்பும். – செல்லமுத்து, கருக்கம்பாளையம்

### 5. மலச்சிக்கல் / வயிறு கட்டுதல்

அறிகுறிகள் : சாணம் வெளியேற்ற முடியாமல் கட்டிப்பட்டு இருத்தல், வெளியேறும் சாணம் சிறிது ஈரத்தன்மை இல்லாமல் கட்டியாக இருத்தல்.

காரணங்கள் :

ஆடுகளுக்கு ஏற்படும் காய்ச்சல், வெயில் காலத்தில் அதிக உஷ்ணம் அல்லது வெக்கையில் ஆடுகள் பாதிக்கப்படுதல், உஷ்ணம் காரணமாக உடலில் உள்ள நீர் அதிக அளவில் வெளியேறுவதால்.

வைத்தியம் :

ஆடுகளுக்கு எனிமா கேனில் 2 லிட்டர் நீரில் 100 கிராம் வேப்ப இலையை கொதிக்க வைத்து பின்னர் ஆற வைக்க வேண்டும். இதனை ஆசனவாய் வழியாக எனிமா நீரை உள்ளே செலுத்திவிட்டு கையை வைத்து சிறிது நேரம் ஆசனவாயை அடைக்க வேண்டும். பின்னர் கையை எடுத்துவிட்டால் சாணம் வெளியேறும். சினை ஆடுகளுக்கு இந்த எனிமா நீர் வைத்திய முறையை செய்யக் கூடாது.

விளக்கெண்ணெய் 200 மி.லி யை 1 அல்லது 2 நாட்களுக்கு கொடுக்கவேண்டும். மஞ்சள் கிழங்கை 100 கிராம் எடுத்து 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து வடிகட்டிய கசாயத்தை ஒரு நாளைக்கு ஒரு முறையாக 1 – 3 நாட்களுக்கு ஆடுகளுக்கு கொடுக்கலாம்.

## உயிர்சக்தி வேளாண்மை பஞ்சாங்கம் 2026

இது நமது பாரம்பரிய பஞ்சாங்கம் கணிப்பதிலிருந்து சிறிது மாறுபட்டதாகும். அவ்வப்போது கோள்களின் சரியான நிலைப்பாடு குறித்து விண்வெளி / வானிலை தகவல் மையங்களில் மூலமாக எடுக்கப்படுவதால் இதனை அறிவியல் பூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளலாம்.

**சந்திரனும், சனியும் பூமிக்கு எதிர் எதிராக இருக்கும் சமயம்**

விதைத்தல் மற்றும் நடவு செய்தல் ; பூஞ்சாண நோயைத் தவிர்க்க கொம்பு சிலிக்கா உரம் தெளித்தல்.

**கீழ்நோக்கு நாட்களில் செய்ய வேண்டியன**

பூமிக்கு கீழே விளையும் பயிர்களின் விதைப்பு / நடவு / அறுவடை செய்தல் ; கம்போஸ்ட் தயாரிப்பு துவக்குதல் / நிலத்திற்கு குப்பை இடுதல் ; கொம்பு சாணம் உரம் தெளித்தல் ; கவாத்து செய்தல் : மரம் வெட்டுதல் ; மரக்கன்று நடுதல் ; உழவு அடித்தல் .

**மேல்நோக்கு நாட்களில் செய்ய வேண்டியன**

கொம்பு சிலிக்கா உரம் தெளித்தல் ஒட்டு கட்டுதல் பதியம் போடுதல் பூமிக்கு மேல் விளையும் பயிர் விதைப்பு , அறுவடை செய்தல், சேமித்தல், திரவ உரம் தெளித்தல்.

**பௌர்ணமி, பௌர்ணமிக்கு 48 மணி நேரம் முன்பு**

திரவ உரம் பயிருக்கு இலை வழி கொடுத்தல் , மண்ணில் திரவ மருந்து தெளித்தல் (Drenching) கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுத்தல்.

**அமாவாசையில் செய்ய வேண்டியது**

அமாவாசைக்கு 48 மணி நேரம் முன்பு விதைப்பு செய்தல். தேய்பிறையில் மரம் வெட்டுதல்.

**நட்சத்திரம் , ராசி பார்த்து விதைத்தல்**

விதைக்காக, பழத்திற்காக, வேர்க்கிழங்கிற்காக பூக்களுக்காக விதைக்கப்படும் பயிர்களை அந்தந்தக் குறிப்பிட்ட நாளில் விதைக்கப்பட வேண்டும். சந்திரன் ஒவ்வொரு ராசி மண்டலத்தையும் சுற்றிவரும் சமயம் எந்த ராசி பக்கம் வந்து கொண்டிருக்கிறதோ அந்த ராசியின் குணத்தை பூமிக்குக் கொடுக்கும். உதாரணமாக கன்னி ராசியின் பக்கம் வரும் சமயம் மண் குணத்தை காட்டுமாதலால் அதனுடன் தொடர்பு கொண்ட வேர் / கிழங்கிற்காக அறுவடை செய்யப்படும் சர்க்கரை வள்ளிக் கிழங்கை நடவு செய்யலாம். காற்று , மண், வெப்பம், நீர் தொடர்புள்ள இராசி நாட்களில் அந்தந்த குணம் கொண்ட பயிரை விதைக்கலாம்.

**பூமிக்கு அருகில் உள்ள நிலா நாள்**

விதைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**பூமிக்கு தொலைவில் உள்ள நிலா நாள்**

விதைப்பது நல்லது

**சந்திரன் பாதையும் சூரியன் பாதையும் குறுக்கிடும் நாட்கள் (தவிர்க்க வேண்டிய நாட்கள்)**

எல்லா விவசாய வேலைகளையும் தவிர்க்க வேண்டும்.

தகவல் : Biodynamic Association of India , Kanakapura, Karnataka, Cell : 9738676611 Email - office@biodynamics.in

# உயிர்சக்தி வேளாண்மை பஞ்சாங்கம்– 2026

| மாதம்; 2026 | சந்திரனும் சனியும்; நேர் எதிராக | பௌர்ணமி | அமாவாசை | மேல் நோக்கு நாள் | கீழ்நோக்கு நாள் | தவிர்க்க வேண்டிய நாட்கள் (கரி நாள்) | நிலா | | விதைக்கவும்/ நடவு செய்யவும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | அண்மை நிலா | சேய்மை நிலா | விதை பழத்திற்காக (தனுசு மேஷம் சிம்மம்) | வேருக்காக (கன்னி மகரம் ரிஷபம்) | பூவுக்காக (மிதுனம் துலாம் கும்பம்) | இலைக்காக (கடகம்; விருச்சகம் மீனம்) |
| ஜனவரி | 9 | 3 | 19 | 18 | 4–17,18–31 | 8,22 | 2,30 | 14 | 6,7,8,16,17,18,25 , 26 | 1, 9,10,19, 20,2728,29 | 2,3,11,12,13,21, 22,30,31 | 4,5,14,15,23,24 |
| பிப்ரவரி | 5 | 2 | 17 | 15–27 | 1–14, 28 | 4,18 | 25 | 10 | 3,4,12,13,14,21, 22 | 5,6,15,16,,23,24,25 | 7,8,9,17,18,26, 27 | 1,2,10,11,19,20,21,28 |
| மார்ச் | 5 | 3 | 19 | 14–26 | 1–13, 27–30 | 3,17,30 | 22 | 10 | 2,3,12,13,21,22, 29,30,31 | 4,5,6,14,15,16,23,24 | 7,8,17,18,25, 26 | 1,9,10,11,19,20,27,28 |
| ஏப்ரல் | 1, 29 | 2 | 17 | 10–23 | 1–9, 24–30 | 14,27 | 19 | 7 | 8,9,10,17,18,,26, 27 | 1,2,11,12,19,20,28,29 | 3,4,5,13,14,21, 22,29,30 | 6,7,15,16,23,24,25 |
| மே | 27 | 1,31 | 17 | 8–19 | 1–7, 20–31 | 11,23 | 17 | 5 | 5,6,7,15,16,23, 24 | 8,9,17,18,25,26,27, | 1,2,10,11,12,19, 20,28,29 | 3,4,13,14,21,22,30,31 |
| ஜூன் | 23 | 30 | 15 | 4–16, | 1–3, 17–30 | 7,19 | 15 | 1,28 | 2,3,11,12,19,20, 29,30 | 4,5,6,13,14,21,22,23 | 7,8,15,16,24, 25 | 1,9,10,17,18,26,27,28 |
| ஜூலை | 20 | 29 | 14, 29 | 1–13, 28–31 | 14–27 | 4,17,31 | 13 | 25 | 8,9,10,13,14,17, 18,26,27,28 | 1,2,3,11,12,19,20,,29,30 | 4,5,13,14,21,22 ,23,31 | 6,7,15,16,24,25 |
| ஆகஸ்ட் | 17 | 28 | 12 | 1 –10,25–31 | 11–24 | 13,28 | 10 | 22 | 5,6,13,14,22,23, 24 | 7,8,15,16,25,26 | 1,9,10,17,18,19, 27,28,29 | 2,3,4,11,12,20,21,30,31 |
| செப்டம்பர் | 13 | 26 | 11 | 1–6, 21–30 | 7–20 | 10,24 | 7 | 19 | 1,2,9,10,11,19,20, 28,29 | 3,4,12,13,21,22,23,30 | 5,6,14,15,24, 25, | 7,8,15,16,17,18,26,27 |
| அக்டோபர் | 10 | 26 | 10 | 1–3,18–31 | 4–17 | 7,21 | 2,28 | 17 | 7,8,16,17,18,26, 27 | 1,9,10,19,20,28,29 | 2,3,4,11,12,13, 21,22,30,31 | 5,6,14,15,23,24,25 |
| நவம்பர் | 6 | 24 | 9 | 15–27 | 1–14, 28–30 | 3,17,30 | 26 | 13 | 3,4,12,13,14,22, 23,30 | 5,6,7,15,16,24, 25 | 8,9,17,18,19, 26,27 | 1,2,10,11,20,21,28,29 |
| டிசம்பர் | 3,30 | 24 | 9 | 12–24 | 1–11, 25–31 | 14,27 | 24 | 11 | 1,10,11,19,20,21, 28,29 | 2,3,4,12,13,14,22,23, 30,31 | 5,6,15,16,24, 25 | 7,8,9,17,18,26,27 |

நன்றி : www.biodynamics.in , ஜெய்சன் ஜே ஜெரோம் : 9443358380, 9965547631

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 300 | 2500 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 200 | 2000 |
| தனிப்பிரதி | 40 | ---- |
| 10 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1500) + ( கொரியர் செலவு ரூ. 300 ) | 1800 | ---- |

0

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா" மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , செல்–9344523892

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------

------------------------------------

------------------------------------

------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, **9344523892**
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in